886

தொகுதி 6.] 1927ஆ ஏப்ரல்மீ 1உ [பகுதி 3.

# மனமோகினி.

ஆசிரியர்
ஆரணி. குப்புசாமி முதலியார்



பிரசுரகர்த்தர்
நா. முனிசாமி முதலியார்,
ஆனந்த நிலயம், சென்னை.

# மனமோகினி

ஓர் மாதாந்த நாவல் சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது தமிழபிமானிகட்குத் திருப்தி யளிக்கக் கூடியதா யிருக்குமென்று நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் கேட்டுக்கொண்டபடி இதனை 1922ஞு பிப்ரவரிமீ 1வ முதல் ஆரம்பித்து நடத்தி வருகிறோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாகவந்து ஆறு மாதங்களுக் கொருமுறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவு பெறும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி - குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" "பவளத்தீவு" "ஞான செல்வாம்பாள்" "அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்ட ஜெயங்கள்" என்ற நாவல்கள் முடிவுபெற்று 1927ஞு ஜனவரிமீத்திலிருந்து கற்பகச்சோலையின் அற்புதக் கொலை என்ற நாவல் தொடங்கப்பட்டு இந்த எப்ரல் மாதத்தோடு முடிவுபெற்றிருக்கிறது. முடிவான ஐந்து நாவல்களும் வேண்டுவோர் புத்தகமாகவே வாங்கிக் கொள்ள வேண்டுமன்றி அவற்றின் சஞ்சிகைகள் கிடையா. 1927-ம் வருஷத்திற்குப் புதிதாகச் சேரும் சந்தாதாரர்களுக்கு 1927ஞு ஜனவரிமீத்தில் தொடங்கப்பட்டிருக்கும் "கற்பகச்சோலையின் அற்புதக் கொலை" என்னும் நாவலின் ஒரு சஞ்சிகை மட்டும் கிடைக்காததலால் அவர்கள் சந்தாத் தொகையில் கூட 4 அணா சேர்த்து ரூ. 2—12—0 அனுப்பிவிட்டால் அந்த சஞ்சிகையும் அவர்களுக்குச் சேர்த்தனுப்பப்படும். இனி தொடங்கப்படும் நாவல் சஞ்சிகைகளும் அனுப்பப்படும். இச்சஞ்சிகைகள் ஒவ்வொன்றும் கிரௌன் 80-பக்கங் கொண்டது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வி-பி-யிலோ முன்பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

ஒவ்வொரு வருஷத்திலும் பிப்ரவரிமீ ஆரம்பமே இச்சஞ்சிகைக்கு வருஷ ஆரம்பம்: எப்பொழுது சந்தாதாராகச் சேர்ந்தாலும் அந்த வருஷம் பிப்ரவரிமாதம் முதற்கொண்டு கணக்கு வைக்கப்படும். உள் நாட்டிற்கு வருஷ சந்தா ரூ. 2—8—0
வெளி நாட்டிற்கு ,, 3—0—0

**இதுவரையில் சஞ்சிகை ரூபமாக வெளிவந்திருக்கும் புஸ்தகங்கள்.**

| | | | | |
|---|---|---|---|---|
| அமராவதி 2 பாகமும் | ரூ. | 4 | 0 | 0 |
| பவளத்தீவு 2 பாகமும் | ,, | 3 | 0 | 0 |
| ஞானசெல்வாம்பாள் 5 பாகமும் | ,, | 9 | 10 | 0 |
| அர்ஜுனஸிங், சுந்தர் | ,, | 0 | 2 | 0 |
| அற்புதமர்மங்கள் அல்லது ஆனந்தஸிங்கின் அஷ்டஜெயங்கள் | | 1 | 12 | 0 |
| கற்பகச்சோலையின் அற்புதக்கொலை | ரூ. | 1 | 4 | 0 |

மானேஜர்:—"ஆனந்த நிலையம்," தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

உ

# கற்பகச்சோலையின்

## அற்புதக் கொலை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9-MAY 1927
MADRAS

ம-ா-ா-ஸ்ரீ, ஆரணி - குப்புசாமி முதலியாரால்
எழுதப்பட்டு

186513

சென்னை :
"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியார் அவர்களால்
வெளியிடப்பெற்றது.

1927

காபிரைட்] [விலை ரூபா 1-4-0.

186513
சென்னை 600 008

[illegible] புத்தகங்கள் துரைத்தனத்தாரால்
அங்கீகரிக்கப்பெற்றவை.

## மாணவர்க்குரிய புத்தகங்கள்.

| | | ரூ. | அ. |
|---|---|---|---|
| கம்பராமாயண சங்கிரகம் | ... | 2 | 0 |
| சதானந்தர் | ... | 1 | 4 |
| [illegible] | ... | 1 | 0 |
| குசேலோபாக்கியானவசனம் | | 1 | 0 |
| கர்ணன் சரிதை | ... | 0 | 12 |
| ஸ்ரீ பீஷ்மவிஜயம் | ... | 0 | 10 |
| வீரத்தன்மையுள்ள ஹிந்து மாது சிரோமணிகள் | ... | 0 | 10 |
| கீர்த்திசிங்கன் | ... | 0 | 7 |
| அரிச்சந்திரன் சரிதை | ... | 0 | 8 |
| சகோதரவாஞ்சை | ... | 0 | 7 |
| நீலக்கொடி | ... | 0 | 5 |
| மணவாளன் | ... | 0 | 3 |
| பரசுராமன் | ... | 0 | 3 |
| தசாவதார மகிமை | ... | 0 | 6 |
| சிசுபாலன் | ... | 0 | 8 |
| சண்டோபாக்கியானம் | ... | 0 | 6 |
| கருணாகரரும் சத்தியசீலரும் | | 0 | 8 |
| சத்திய வசனி | ... | 0 | 4 |
| அங்கதன் | ... | 0 | 4 |
| நாலு மந்திரி கதை | ... | 0 | 4 |
| விமலன் | ... | 0 | 4 |
| கண்ணபிரான் | ... | 0 | 4 |
| செய்யுட்பாடத் திரட்டு | ... | 0 | 4 |
| சீமந்தனி | ... | 0 | 8 |
| தக்கன் | ... | 0 | 6 |
| மங்களேசுவரன் | ... | 0 | 8 |
| நரிவிருத்தம் மூலமும் உரையும் | | 0 | 4 |
| ஸ்ரீ பாலன் | ... | 0 | 10 |
| உதயணன் | ... | 0 | 8 |
| தசக்கிரீவன் | ... | 0 | 14 |
| போஜசரித்திரம் | ... | 0 | 5 |

ஆனந்தபோதினி ஆபீஸ்,

மதராஸ்.

ஆனந்தலிங் அவனை மிரளச் செய்யாமல் பட்சமாய்ப் பேசிய மாதிரியால் சுந்தரம் எதையும் மறைக்க முடிய வில்லை. அவன் சற்று தாழ்ந்த குரலாய் ஆனந்தலிங்கை நோக்கி,

"அய்யா! இரத்னசாமிப் பிள்ளையைக் கற்பகச் சோலைக்கு வரும்படி டெலிபோனில் கூறியது நான்று னென்று ஒப்புக்கொள்ளச் சொன்னார்" என்றான்.

இதைக் கேட்டதே "அம்புஜம் வெட்கக்கேடு இது. ஏன் சுத்தரம்? சிற்றப்பா சேகரம் செய்யும் பூச்சிகள் முத லிய வற்றின் பெயர் உனக்கெப்படித் தெரியும்" என்றாள்.

சுந்:—"ஏனம்மா தெரியாமல் என்ன. நான் அவருக்காகப் பூச்சிகளைப் பிடிக்கப் போன்வைப்பதுண்டு. அனேகம் பூச்சிகளின் பெயர்கள் எனக்குத் தெரியும்" என்றான்.

ஆனந்தலிங் அம்புஜத்தை நோக்கி "ஏனம்மா, இது உண்மையாயிருக்குமா? அச்சுதம் பிள்ளை இம்மாதிரி தன் கக்ஷி ஜெயிப்பதற்காகப் பொய்ச் சாக்ஷிகளையும் யோசிப் பது வழக்கமோ?" என்று வினவினான்.

அம்புஜம் வெட்க மடைந்து கீழ்ப்பார்வையாய் "இராது; அவர் அவ்வாறு செய்பவரல்ல. ஒருவருக்காக... என்று தடுமாற்றத்தோடு மயங்கினாள். ஆனந்தலிங் "போதும் போதும் இன்னும் அதிகமாகக் கூறவேண்டாம். ...அவர் உனக்காக இப்படிச் செய்யக்கருதுகிறார்...அல் லவா?" என்றான்.

அம்பு:—"ஆம். நீ எனக்கு உதவி செய்ய வந்திருக்கிற வரையில் உன்னிடம் உண்மையைக் கூறுகிறேன். அச் சுதம்பிள்ளை இலக்ஷ்மணனைக் காப்பாற்றி விட்டால் நான் அவரை மணம் புரிந்துகொள்வதாய் வாக்களித் திருக்கிறேன்" என்றாள்.

ஆனந்தலிங் அவளுடைய உண்மையான நிலைமையை யுணர்ந்து பரிதாபங்கொண்டு "சரிதான் தெரிந்துகொண் டேன். உன் பொருட்டுச் சுந்தரத்தைத் தியாகம் செய்யக் கருதுகிறார். இது புத்திசாலித் தனமான யோசனையே. எப்படியாவது சுந்தரம் தண்டனை யடையாதபடி செய்வார் என்று நினைக்கிறேன்" என்றான்.

அம்பு:—"ஆம். அப்படித்தான்-இலக்ஷ்மணன் தப்பித்துக் கொள்ள வேண்டுமாயின் வேறு யாரேனும் அந்த டெலிபோன் சங்கதியை யனுப்பியதாக ஒப்புக் கொள்ளவேண்டும் என்று என்னிடம் கூறினார்" என்றாள்.

ஆனந்த:—இது மிகத் துணிகரமான செய்கை.

அம்பு:—ஆம். அச்சுதம்பிள்ளை துணிகரமான ஆளே-தான் ஒரு காரியத்தைச் செய்ய எண்ணினால் எத்தனை தடைகள் நேரினும் அதைச் செய்தே தீரும் குண முடையவர்.

ஆனந்த:—இன்று நடந்த விஷயங்களால் அவர் மனதின் மாதிரி நன்றாகத் தெரிகிறது-எதையும் செய்யக்கூடிய வர். அன்னியரைத் தம் எண்ணப்படி கருதும்படி செய்யவல்லவர்.

அம்பு:—"ஆம் அதனால்தான் இந்த விவகாரத்தில் நான் அவரை நம்பி யிருக்கிறேன்" என்றாள்.

* * * * *

மேற்கண்ட சம்பவங்கள் நடந்ததும் சீக்கிரம் அம்பு ஜம் இலக்ஷ்மணனைக் காணச் சென்றாள். அம்புஜம் இலக்ஷ் மணனைத் தனியே கண்டு பேசும்படி விடப்படுவதில்லை. ஆயினும் அச்சிறைச்சாலைக் காவலன் அம்புஜத்தின் விஷ யத்தில் இரக்கங் கொண்டானதலின் அவள் வரும்போது அவன் அவளுக்கு அனுகூலமாகவே நடந்துகொண்டான்.

அம்புஜம் இலக்ஷ்மணனைக் கண்டு தான் ஆனந்தவிங்கை யமர்த்தியிருப்பதும், அவன் கூறிய விஷயங்களையும் இயம் பினாள்.

இலக்ஷ்மணன் யாவும் கேட்டுக்கொண்டபின் அம்பு ஜம் "நீ இனியேனும் முரட்டுத்தனத்தை விட்டு நடந்து கொள்வாய் என்று நம்புகிறேன்" என்று அவன் இருகரங் களையும் பற்றிக்கொண்டு கூறினாள்.

இலக்ஷ்மணன்:—"முரட்டுத்தனமா? உனக்கென்ன பைத் தியமா-நான் சிற்றப்பாவைக் கொல்லவில்லை. அவர் கள் நான் கொன்றேன் என்றால் அதை ருசுப்படுத் தட்டும். நடவாத காரியத்தை ருசுப்படுத்த ஒரு போதும் முடியாது" என்றான்.

அம்புஜம்:—நீ இப்படிக் கூறியது இதுதான் முதல் முறை என்பது தெரிகிறதா?

இலக்ஷ்:—ஆம். ஏனெனில் நீ கொஞ்சமேனும் என்மேல் சந்தேகங்கொண்டது என் மனதிற்குச் சகிக்கொணாத வருத்தத்தை யளித்தது. நீ யென்மேல் சந்தேகிக்க லாமோ? எல்லம்மாள் சந்தேகிக்கவில்லையே.

அம்பு:—எல்லம்மாளைப்பற்றி யுனக்கென்ன கவை?

இலக்ஷ்:—ஒன்றுமில்லை. அவள் பழைய சினேகி. தென் னூரிலிருந்த போது முதல் பழக்கம்.

அம்பு:—ஏன் புதிதாகச் சந்தித்தவர்கள் போல் அபிநயித் தீர்கள்?

இலக்ஷ்:—"அதற்குக் காரணம் இருக்கிறது. எனக்குச் சுரங்க விஷயத்திற்காக உடனே பணம் வேண்டியதாக இருந்தது. அவள் கொடுப்பதாக ஒப்புக்கொண்டு நகர வாசகசாலைக்கு உண்டிகள் முதலிய பத்திரங் களைக்கொண்டு வருவதாய்க் கூறினாள்.

அம்பு:—ஏன் வீட்டிற்கு வரலாகாது?

இலக்ஷ்:—அந்தப்பண விஷயத்திற்காக அங்கு வர எனக்குப் பிரியமில்லை. சிற்றப்பா கொடுக்கமாட்டேன் என்று கூறிவிட்டதால் அச்சமயம் வீட்டிற்கு வர விருப்பமில்லை. பணமோ அவசரமாய் வேண்டியிருந்தது.

அம்பு:—அப்படியானால் மரண விசாரணையில் பணம் கிடைக்கவில்லை யென்று ஏன் கூறினாய்?

இலக்ஷ்:—அவள் என்னிட மளித்தவற்றில் சில பத்திரங்கள் அச்சமயம் தாழ்ந்தமதிப்பிலிருந்தன; ஆனால் சீக்கிரம் மதிப்பேறும் என்று தெரியும். நான் அச்சமயம் என்னிடம் பணம் இருப்பதை வெளியிட்டால் அவளுக்கு நஷ்ட முண்டாகும். அப்படிச் செய்வது துரோகமாகுமாதலின் நான் அவ்வாறு கூறவேண்டியதாயிற்று.

அம்பு:—கொலை நடந்த இரவு அவள் உனக்கு டெலிபோன் கொடுத்தாளோ?

இலக்ஷ்:—ஆம். சிற்றப்பாவின் மரணத்தைப்பற்றிக் கூறினாள். நான் அச்சமயம் ஜகநாதனுடைய வாசஸ்தலத்திலிருப்பது அவளுக்கு மட்டுமே தெரியும். ஆனால் அன்று நான் உன்னை வந்து காணவே விரும்பினேன். சிற்றப்பாவோடு நேர்ந்த சச்சரவால் என் மனம் கொதித்துக்கொண் டிருந்தது. அவ்வாறான நிலைமையில் இங்குவரப் பிரியமில்லாமல் பிறகு செல்லலாமென்றிருந்தேன். இரவு அவர் கொலை செய்யப்பட்டாரென்ற சங்கதி வந்தது. நீ எல்லம்மாள் விஷயத்தில் தவறாய்க் கருதவேண்டாம். உன்மேல் அவளுக்கு எள்ளளவும் கெட்ட எண்ணமில்லை. ஆனால் அவள் மனம் சலனமுடையது. 'எதிலும் இலாபத்தையே கருதுபவள். சிற்றப்பாவின் மேல் அவளுக்கு உண்

மையாகவே அன்பு இருந்தது. ஆனல் அவள் வெளிக்கு அதைக் காட்டவில்லை. அவள் குணம் அம்மாதிரி. அவரை யார் கொன்றதென்பதைப் பற்றி யவள் சிந்திக்கவேயில்லை. அது அவள் சுபாவ குணம். அவள் எப்போதும் எதிர்காலத்திலேயே நோக்கமுடையவள். நீ கொலையாளி யார் என்று கருதுகிருய்?

அம்பு:—எனக்கு யாரென்று அறியக்கூடவில்லை. யாரோ அன்னிய மனிதன் எவனே கள்ளனக விருக்கலாம் என்றே கருதுகிறேன். நீயும் அப்படித்தானே கருதுகிருய்?

இலக்ஷ்:—யாரோ தெரியாது. ஆனல் நீ கூறியபடி யிராதென்பது என் கருத்து. ஆனந்தலிங் என்னைக் காண வருகிருன?

அம்பு:—ஆம். ஏன்? வரவேண்டாமென்கிருயோ?

இலக்ஷ்:—வரவேண்டுமென்பதே யென் விருப்பம். நான் தனியே இங்கிருக்கும் நேரங்களில் எனக்குள் சில உத்தேசங்கள் உண்டாகி யிருக்கின்றன. நான் அவற்றைப்பற்றி யானந்தலிங்கிடம் கலந்து பேசவேண்டும். சுந்தரம் ஓடிவிட்டானே, அவன் சங்கதி என்னவாயிற்று?

அம்பு:—அவன் பயத்தாலேயே யோடிவிட்டான். தான் நிரபராதியாயினும் அச்சமயம், வேறிடத்திலிருந்ததாக ருசுப்படுத்த அவனல் முடியாததால் பயந்துவிட்டான்.

இலக்ஷ்:—நீ வீணய் இதைப்பற்றி உன் மனதைக் கலங்க வைக்காதே. துப்பறிபவர்களுக்கு இவ்வேலையை விட்டுவிடு. அந்தக் கிருஷ்ணராவ் அவ்வளவு கெட்டிக்காரனல்ல. உனக்கெப்படிப் புலப்படுகிறது?

அம்பு:—அல்ல தான். ஆனால் ஆனந்தலிங் உண்மையைக் கண்டு பிடிப்பான் என்று நிச்சயமாய்க் கருதுகிறேன்.

இலக்ஷ்:—அந்தப் பிணகபாணி—அவன் என்ன செய்கிறான்.

அம்பு:—"அவனும் துப்பறிவதில் பழக்கமுடையவனல்ல" என்றாள்.

அம்புஜம் சென்ற சற்று நேரங்கழித்து ஆனந்தலிங் சிறைச்சாலைக்கு வந்தான். முதலில் அவன் குருநாதன் என்றும் இலக்ஷ்மணனுடைய நண்பன் என்றும் கூறியதால் சாதாரணமான ஆள்போல் விடப்பட்டான். பிறகு சிறைச்சாலை யதிகாரிகளிடம் தன் உண்மையைக்கூறியதே இரகசியமாய் இலக்ஷ்மணனோடு சம்பாஷிக்க விடப்பட்டான். இலக்ஷ்மணன் முதலில் ஒரு மாதிரியாய் நடந்து கொண்டான். ஆனால் ஆனந்தலிங் தான் நிரபராதி யென்று தெரிந்துகொண்டிருக்கிறான் என்பதை யுணர்ந்த பின் அவனிடம் மனம்விட்டுச் சினேக பாவமாய்ச் சம்பாஷிக்கத் தொடங்கினான்.

அவன் ஆனந்தலிங்கை நோக்கி "நானும் என் சிற்றப்பாவும் அப்போதைக்கப்போது கடிதம் வரைந்துகொண்டிருந்தோம். சமீபத்தில் அவர் மிக்க சினேகபாவமாய் எழுதிக்கொண்டிருந்தார். என்னை யிங்கு வந்து விடும்படி எழுதினார். நான் கலியாணம் செய்துகொண்டு ஜீவிக்கப் போதுமான பணம் சம்பாதித்ததும் அவ்வாறே செய்ய வெண்ணி யிருந்தேன். அதற்குள் இச்சுரங்க விவகாரம் நேர்ந்தது. அதில் பங்கு எடுத்தால் நல்ல பொருள் கிடைக்குமென்று தோன்றியதால் இவரிடம் வந்து பணங் கேட்டேன். அச்சமயம் இவர் மிகக் கடுமையாய்ப் பேசி, பணம் கொடுக்க மறுத்துவிட்டார். அதனால் இன்னும் இரண்டொரு நாட்கள் கழித்து அவர் வீட்டிற்குச் செல்ல

லாமென்றெண்ணி என் சினேகரில் ஒருவனான ஜகநாதன் வீட்டில் போய்த் தங்கினேன். இச்சங்கதிகளனைத்தும் நீ யறிவாய். இனி நாம் விவகரிக்க வேண்டிய சங்கதியைப் பற்றிப் பேசுவோம்'' என்றான்.

ஆனந்தஸிங்:—என் மனதிற்குப் புலப்படுவது, முதலாவது ருசு அந்தக் கைக்குட்டை; அது சுந்தரத்தினுடையது; ஆனால் சுந்தரம் அதை யங்கு கொண்டுபோகவில்லை. அவன்மேல் இக்குற்றத்தைச் சுமத்த அப்படிச் செய்யப்பட்டது. அது எனக்கு நிச்சயம். இப்போது யார் அதைச் செய்தது?

இலக்ஷ்:—இந்த விஷயத்தில் உனது அபிப்பிராயத்திற்கு நான் இணங்கமாட்டேன். ஏனெனில் அக்குட்டை சுந்தரம் குட்டையே யாயினும் அதை யச்சமயம் என் சிற்றப்பாவே தம் ஜேபியில் வைத்துக்கொண்டிருந்திருப்பார். அவர் இத்தகைய விஷயங்களில் மிக்க அஜாக்கிரதையாக நடந்துகொள்கிறவர். இது நமது குட்டையல்ல என்பதைக் கவனியாமலே எடுத்துச் செல்வார். அப்படிப் பன்முறை நடப்பதை நான் கண்டிருக்கிறேன். ஒரு முறை அம்புஜத்தின் குட்டையைத் தமது ஜேபியில் வைத்துக்கொண்டிருந்த போது நான் பார்த்தேன். ஆகையால் அக்குட்டையை யொரு ருசுவாக நம்பலாகாது.

ஆனந்த:—அவருடைய இந்தச் சுபாவம் எனக்குத் தெரியாது. இருக்கட்டும். இரண்டாவது அந்தப் பென்ஸில் இருக்கிறது. அது கொலை நடந்த விடத்திலிருந்தகப்பட்டது. போலீஸார் அதை யவ்வளவாகக் கவனிக்கவில்லை. ஆனால் அது ஒரு முக்கியமான அத்தாட்சியே. உன் சிற்றப்பா வைத்துக்

கொண்டிருந்த பென்ஸில்களைப்பற்றி யுனக்கு அவ்வளவாகத் தெரியாதென்று கருதுகிறேன்.

இலக்ஷ்:—தெரியாது தான்; ஆனால் அவருடைய காரியாலயத்திலிருப்பவர்கள் வீட்டிலுள்ளவர்கள் யாவரும் அதே மாதிரி பென்ஸில்தான் அவர் உபயோகிப்பதென்று கூறுவதால் அதைப்பற்றிச் சந்தேகிக்கக் காரணமில்லை யென்று கருதுகிறேன்.

ஆனந்த:—நான் அதை யொரு விநாடியே பார்த்தேன். இனித்தான் நன்றாகக் கவனிக்கவேண்டும். அது பென்ஸில் சீவும் கருவியால் சீவப்பட்டிருந்தது. அத்தகைய கருவியை யவரிடம் பார்த்திருக்கிறாயா?

இலக்ஷ்:—இல்லையில்லை. அவர் அம்மாதிரி யொன்றையும் வைத்துக்கொண் டிருக்கமாட்டார். புதுமாதிரி விஷயம் அவருக்கு எதுவும் பிடிக்காது. கொலை செய்தவனே யதைப்போட்டுவிட் டிருக்கலாகும்.

ஆனந்த :—ஆம். இருக்கலாம். அப்படிப்பட்ட அற்ப விஷயத்தில்தான் அனேக சந்தர்ப்பங்களில் பெரிய விவகாரம் அடங்கியிருப்பது. அந்தச் சிறுவன், உன் சிறிய தந்தையின் காரியாலயத்தில் இருந்த சிறுவன். அவனைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?

இலக்ஷ்:—திருவேங்கடம், உடான் திருவேங்கடமா? அவன் நல்ல புத்திசாலி - சாமார்த்தியவான். என் சிற்றப்பாவிடம் உண்மை யன்புடையவன்.

ஆனந்த:—ஆம். அவன் மிக்க புத்தி சாதுரியமுடையவன். எனக்கு உதவியாயிருக்கும்படி யவனைக் கேட்டுக் கொண்டேன்.

இலக்ஷ்:—என்ன? ஒரு சிறுவன் ஆனந்தலிங்குக்கு உதவி செய்கிறதா? நான் கேலிசெய்வதாய் நினைக்க வேண்டாம்.

ஆனந்த:—நீ கேலிசெய்தாலும் பரவாயில்லை. நீ அந்த டெலிபோன் சங்கதியை யனுப்பவில்லை.

இலக்ஷ்:—இல்லை.

ஆனந்த:—சரி. யாரோ உன்மேல் சந்தேகத்தை யுண்டாக்க வெண்ணியே யப்படிச்செய்தார்கள். அந்தக் குட்டை விஷயமும் அப்படியேதான். யாரோ சுந்தரத்தின் மேல் சந்தேகமுண்டாக்க அப்படிச்செய்தார்கள். இருவர்மேல் பெரிய சந்தேக முண்டாகும்போது உண்மையில் அக்கொலையைச்செய்த ஆள் தப்பித் துக்கொள்ள நல்ல சந்தர்ப்பம் இருக்கிறது.

இலக்ஷ்:—நீ கூறுவது யாவும் சரியே.

ஆனந்த:—பென்ஸிலும் வேணுமென்றே அங்கு விடப் பட்டதாயின் அதுவும் அதிகாரிகளுக்குத் தப்பு வழி காட்டவே செய்யப்பட்டது என்பது உண்மை.

இலக்ஷ்:—யாவும் சரிதான். அப்புறம்.

ஆனந்த:—இவையாவும் உண்மையாயின் இதைச்செய்தவன் மிக்க முன்யோசனையோடு எதையும் செய்யும் புத்தி சாலியென்று தெரிகிறது. ஆகையால் சாதாரண மான கள்ளர் போக்கிரிகள் இத்தகையவர்களில் சேர்ந்தவனல்ல நமது கொலையாளி என்று நன்கு விளங்குகிறது.

இலக்ஷ்:—"யாவும் உண்மையே. போலீஸார் இதைக்கண் டறியாதது வியப்பே.

ஆனந்த:—"போலீஸார் வெளித்தோற்றங்களிலேயே முத லில் நாட்டமுடையவர்கள். ஆனால் திருவேங்கடம் எதையும் ஆழ்ந்து பார்க்கும் சூக்கும அறிவுடைய வன். துப்பறிபவனுடைய மூளை யவனுக்கிருக்கிறது. அவன் பிரசித்திபெற்றவனாவான். நான் இனிச் செல்லவேண்டும். இந்தப்பிற்பகல் திருவேங்கடத்தைச்

சந்திப்பதாய் ஏற்பாடு செய்திருக்கிறேன்" என்று கூறிவிட்டு விடைபெற்றுச் சென்றான்.

ஆனந்தஸிங், தான் எதிர்பார்த்ததைவிட மிக்க திருப்தியோடும் சந்தோஷத்தோடுமே எதிர்பார்த்துச் சென்றான். ஏனெனில் இலக்ஷ்மணன் மிக்க முரட்டுக்குணமுடையவனென்றும் அவன் நடக்கையில் அவன் குற்றவாளியா அல்லவா வென்பதை யறியக்கூடவில்லை யென்றும், இன்னும் பலவிதமாகவும் ஆனந்தஸிங்கிடம் பலர் கூறியிருக்கிறார்கள். ஆயினும் அவனுடைய உண்மையான சுபாவத்தைப்பற்றி அம்புஜம் கூறக்கேட்டதே அவன் மனம்விட்டு உண்மையை வெளியிடச்செய்வது எவ்வாறென்பதை ஆனந்தஸிங் உணர்ந்துகொண்டான். அதன்படி யிப்போது அவனிடம் பேசியதால் அவன் மனதிலுள்ள உண்மை யாவும் சரியாக உணர்ந்துகொண்டான். அதனால் அவன் விஷயத்தில் ஆனந்தஸிங்குக்கு மிக்க திருப்தியே யுண்டாயிற்று.

---

## 22-வது அத்தியாயம்.

மேற்கண்ட சம்பவங்கள் நிகழ்ந்துகொண் டிருக்கையில் அச்சுதம்பிள்ளை அம்புஜத்தை வந்து கண்டான். "இப்போது நான் செய்திருக்கும் ஏற்பாட்டால் பெரும்பாலும் அனுகூலமாகவே முடியுமென்று நம்புகிறேன்" என்றான். அம்புஜம் "நீ ஏதோ தகாதகுற்றத்தைச் செய்யப்போகிறாய்" எனறாள்.

**அச்சுதம்பிள்ளை:**—ஆ! அதை வாயாற்கூறாதே. சுவர்களுக்கும் காதிருக்கும். வேறெவ்வழியும் பயன்படாத பின்பே நான் அவ்வாறு செய்ய நேர்ந்தது.

அம்புஜம்:—அப்படியானால் நீ இலக்ஷ்மணனே குற்றவாளி என்று நினைக்கிறாய்?

அச்சு:—வேறு யார்மேல் சந்தேகிக்க இடமிருக்கிறது? எல்லா ருசுக்களும் அவனையே காட்டுகின்றன. நான் உனக்காக எத்தகைய காரியத்தையும் செய்வேன். எந்த ஆபத்திற்கும் உடன்படுவேன். இதனாலேயே எனக்கு உன்மேலிருக்கும் காதல் எத்தகையதென்று நீ அறிந்துகொள்ளலாகும்.

அம்பு:—உன் உதவியின்றி என் முயற்சியாலேயே நான் இலக்ஷ்மணனைக் காப்பாற்றுவேன் என்று கூறியிருக்கிறேன்.

அச்சு:—உன்னால் முடியவேமுடியாது. நீ ஆனந்தவிங்கையமர்த்தவில்லையே?

அம்பு:—நீதான் வேண்டாமென்று கூறினையே.

அச்சு:—அவன் உதவாது. அவன் வந்தால் நான் செய்யும் காரியத்தை யறிந்துகொள்வான். பிறகு எனக்கு அவமானமும் ஆபத்துமாய் முடியும்.

அம்பு:—"அப்படியாயின் ஆனந்தவிங் விஷயத்தில் உனக்குப் பீதியே?

அச்சு:—"ஆம். இந்த விஷயத்தில் பீதிதான். கிருஷ்ணராவ் அவ்வளவு சாமார்த்தியவானல்ல. அவன் என் சூழ்ச்சியை யறிந்துகொள்ளமாட்டான். ஆனால் ஆனந்தவிங் மிக்க சாமார்த்தியமுடையவன். உனக்காகவே நான் இந்த ஆபத்திற்குத் துணிகிறேன்" என்று கூறினான்.

சென்னை-600 008
186513

கொலையைப்பற்றிய விசாரணை தொடங்கிவிட்டது. விசாரணை சில நாட்கள் நடந்தன. ஆனந்தவிங் ஒவ்வொரு சமயத்தில் மட்டுமே நியாயஸ்தலத்திற்கு வந்துகொண்டிருந்தான். ஆனால் தன் காரியஸ்தன் ஒருவனை நீதிச்சபை

யில் காயமாய் வைத்திருந்தான். தன் வரையில் புது உளவுகளைக் கண்டுபிடிக்கும் வேலையில் இருந்தான். அதோடு தன் ஆட்களில் சிலரையும் அவ்வேலையில் விட்டிருந்தான்.

ஆனந்தஸிங் ஒருநாள் பிற்பகல் இரண்டுமணிக்குத் தன்னை வந்து காணும்படி திருவேங்கடத்திற்குக் கூறியிருந்தான். சிறுவன் வரவில்லை. ஆனந்தஸிங் கால்மணி வரையில் காத்திருந்தபின் திருவேங்கடம் வீட்டிற்கு டெலிபோன் கொடுத்தான். திருவேங்கடத்தின் சிறிய தாய் “அவன் ஒருமணி நேரத்திற்கு முன் வெளியிற்சென்றான். யாரிடமிருந்தோ டெலிபோனில் சங்கதிவந்தது. யாரிடமிருந்தென்று எனக்குத் தெரியாது. அவன் உடனே துரிதமாய்ப் போய்விட்டான்” என்று கூறினாள்.

திருவேங்கடம் கட்டளைப்படி யெப்போதும் தவறாமல் நடப்பவன் என்று ஆனந்தஸிங்குக்குத் தெரியும். ஆகையால் ஏதோ தவறு நடந்திருக்கிறதென்று தெரிந்துகொண்டு தன் ஆட்களில் இரண்டொருவரை யவனைக் கண்டுபிடிக்கும்படி யனுப்பிவிட்டு தான் உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடிக்கும்படி பெரிய வலைவீசும் வேலையைக் கவனிப்பதில் கருத்துடையவனாய்ச் சென்றான்.

திருவேங்கடத்திற்கு டெலிபோனில் சமாசாரம் வந்தது உண்மையே. அதில் வந்த சங்கதி யென்னவெனில் “நீ உடனே முப்பத்திரண்டாவது வீதியின் கோடிக்குவா. ஆனந்தஸிங் உனக்காக ஒரு வண்டியில் காத்துக்கொண்டிருக்கிறார்” என்பதே. திருவேங்கடம் உடனே புறப்பட்டு அந்த விடத்திற்குச் சென்றான். அங்கு ஒரு வண்டியிருந்தது.

திருவேங்கடம் அந்த வண்டியின் அருகிற் சென்றதும் சாரதி “சரிதான் ஏறிக்கொள்” என்றான். திருவேங்கடம்

உடனே யேறிக்கொண்டான். வண்டிக்குள் ஒரு ஜப்பான் சிறுவன் இருந்தான். அவன் திருவேங்கடத்தின் வயதுடையவனே; அவன் திருவேங்கடத்தை நோக்கி "சரி உட்கார். ஆனந்தலிங் உன்னை யழைத்து வரச்சொன்னர்" என்ருன்.

திருவேங்கடத்திற்கு இது முதலில் சற்று வியப்பாகவே தோன்றியது. ஆனல் ஆனந்தலிங் அம்மாதிரி திடீலென்று அதிசயமான மாதிரியாய்த் தன்னை வரும்படிச் சங்கதியனுப்புவதுண்டு. ஆகையால் ஆனந்தலிங்கே தன்னை அழைத்து வரச்சொன்னனென்று நம்பிக்கொண்டான்.

வண்டி துரிதமாய்ச் சென்றதும், கடைசியில் ஒரு பெரிய வீதியில் நாணயமான ஒரு வீட்டின் முன் நின்றது. ஜப்பான் சிறுவன் இறங்கு என்ருன். திருவேங்கடம் இறங்கினன்; அந்த வீடு ஆனந்தலிங் வீடல்லவென்று அவனுக்குத் தெரியும். ஆயினும் ஆனந்தலிங் கட்டளைப்படி நடப்பதென்ற தீர்மானமுடையவன்-அப்படி நடந்ததில் இதுகாறும் எவ்வித இடையூறும் நேரவில்லை. ஜப்பான் சிறுவன் வண்டியை யனுப்பிவிட்டுத் தன்னிடமிருந்த ஒரு சாவியையெடுத்துக் கதவைத் திறந்ததும் இருவரும் உள்ளே சென்ருர்கள். ஜப்பான் சிறுவன் "ஆனந்தலிங் மேல்மாடியிலிருக்கிருர்" என்ருன்.

திருவேங்கடம் பேசாமல் அவன் கூடவே படிகளிலேறி மேல் மாடிக்குச் சென்ருன். இருவரும் அங்குள்ள முன் பக்க அறைக்கும் பின்பக்க அறைக்கும் இடையிலுள்ள நடு அறைக்குச் சென்ருர்கள். அதில் ஒரு சிறு துவாரம் தவிர சாளரம் ஒன்றுமில்லை. அத்துவாரம் காற்று வர வைக்கப்பட்டது.

இருவரும் உள்ளே சென்றதும் ஜப்பான் சிறுவன் மின்

சார தீபத்தை யேற்றினன். திருவேங்கடம் அது ஒரு படுக்கையென்று கண்டு வியப்படைந்தானெனினும் பீதியடையவில்லை. ஆயினும் அந்தச் சிறுவனுடைய முகத்தின் மாதிரியால் சற்று கலக்கமடைந்தான். உடனே "நான் இப்போது எங்கிருக்கிறேன்? ஆனந்தவிங் எங்கே?" என்று கேட்டான்.

ஜப்பான் சிறுவன் :—"இங்கே ஆனந்தவிங் இல்லை. நீ போனில் சுலபமாய்ச் சிக்கிக் கொண்டாய்-நீ இங்கே இருக்கவேண்டும்" என்றான்.

திரு:—என்ன? இங்கே யிருக்கவேண்டுமா? போனு? உடனே என்னை வெளியில் செல்லவிடு. இன்றேல் உன்னைப் பெற்ற தாயார்கூட உன் உருவத்தை யறியாதபடி செய்து விடுவேன்.

ஜப் சிறு :—என்மேல் கோபித்துக்கொள்ள வேண்டாம். நீ சிக்கிக் கொண்டாய்-இனி இங்கேயே யிருக்கவேண்டும். என்னிடம் கொஞ்சம் மரியாதையாகவே பேசு. வீணாய் நாம் சண்டையிடலாகாது - என்மேல் ஒரு குற்றமுமில்லை. நான் எஜமான் கட்டளைப்படி நடக்க வேண்டியவன்.

திருவேங்கடம் இதற்குள் உண்மையை யறிந்து கொண்டான். அதாவது தன்னை யாரோ இங்குகொண்டு வந்து அடைத்துவைக்கும்படி ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று அவன் சூக்கும அறிவிற்குப் புலப்பட்டுவிட்டது - அதன்மேல் அவன், கதவை மூடிக்கொண்டு வெளியில் செல்ல முயலும் சிறுவனை நோக்கி "அடே அடே இந்தா. உன் பெயரென்ன?" என்றான்.

சிறுவன் என் பெயர் கிட்டு என்றான். திருவேங்கடம், "நான் இருக்கும் வீடு எங்கே யிருக்கிறது? யாருடையது. அதைக்கூறு" என்றான்.

கிட்டு அவற்றைப்பற்றி நான் கூறமுடியாது என்றான். திருவேங்கடம் முடியாதா? முடியும்படி செய்கிறேன் பார் என்று கூறிக்கொண்டே அவனை யோங்கிக்குத்தக் கையைத் தூக்கினான். இருவரும் ஒரு வயதுடையவர்களே. திருவேங்கடம் கை கீழிறங்கும்போது கிட்டு அதைப்பிடித்தது மட்டுமே யவனுக்குத் தெரியும். அவன் அப்பா என்று பின்னிடைந்து விட்டான்.

பிறகு கிட்டுவை நோக்கி "ஆ இது உங்கள் நாட்டு வித்தை யல்லவா? பேஷ் நீ கெட்டிக்காரன்" என்றான். கிட்டு "இது ஜு-ஜிட்ஸு என்ற வித்தை" யென்றான். அது ஜப்பான் தேசத்தார் கற்றிருக்கும் ஒருவித அபூர்வமான மல்யுத்த வித்தை. அதை யவர்கள் அன்னியர்க்குக் கற்றுக்கொடுப்பதில்லை. திருவேங்கடம் பார்த்தான். இச்சிறுவனிடம் நல்லதனமாகத்தான் நடந்துகொள்ள வேண்டும் என்று எண்ணிக்கொண்டு,

"நல்லது. இரண்டொரு சங்கதிமட்டும் கூறு. சினேகபாவமாய். உன் எஜமான் பெயரென்ன?" என்று கேட்டான்.

கிட்டு, "நான் கூறலாகாது. உங்கள் நாட்டுப்பெயர் என்வாயில் நுழைவதில்லை. அதனால் நான் கேட்டவர்களுக்குப் பதிலளிக்க இதோ இச்சீட்டை வைத்துக்கொண்டிருக்கிறேன்" என்று ஒரு அச்சடித்த சீட்டை யெடுத்துக் காட்டினான். அதில் பெரியண்ணன்பிள்ளை என்றிருந்தது.

திருவேங்கடம் அதைப்பார்த்ததும், "ஆ! இது உன்னால் கூறமுடியாததல்ல. இப் பெரியண்ணன்பிள்ளை யாரோ எனக்குத்தெரியவில்லை. ஆகையால் நீ நல்லவனல்லவா, என்னை விட்டுவிடு" என்றான்.

கிட்டு, "என் எஜமான் கட்டளைப்படி நான் நடக்க

வேண்டும். இதைப்பற்றிமட்டும் கேட்காதே" என்று கூறிக் கதவை மூடிப் பூட்டிக்கொண்டு சென்றான்.

திருவேங்கடம் சற்றுநேரம் சிந்தித்தபின் அந்த இடத்தைச் சோதிக்கமுயன்றான். அவன் இருக்கும் அறையில் ஒரு மேஜைமேல் சீப்புகள், கூந்தலில் சொருகும் ஊசிகள், இரவிக்கைகள் முதலியவையிருந்தன. மாதர் அணியும் பாதரட்சைகளும் இருந்தன. இவற்றால் அந்த அறை ஒரு ஸ்திரீயின் படுக்கையறை என்றும் சமீபகாலம் வரையில் அதில் ஒரு ஸ்திரீ வசித்துக்கொண் டிருந்தாளென்றும் அறிந்துகொண்டான். அந்த அறைக்குள் இன்னொரு அறையிருந்தது. அதைப்பார்த்தான். அது ஸ்நானம் செய்யும் அறை. அதில் ஒரு சிறு சாளரம் இருந்தது. அதில் தலையை நீட்டிப்பார்த்தான். தான் மூன்றுவது அடுக்குமாடியில் இருப்பதாகத்தெரிந்தது. பக்கத்தில் ஒரு வீடிருந்தது. அதன் சாளரங்களெல்லாம் மூடப்பட்டிருந்தன. "நாம் இருப்பது நல்ல செல்வவந்தன் வீடு. இதிலிருந்தவர்கள் நாட்டில்போய் இருக்கிறார்கள். அண்டை வீட்டாரும் அப்படியே" என்று எண்ணிக்கொண்டான். தான் தவறுக கொண்டுவரப்படவில்லை யென்றும் வேணுமென்றே யாரோ செய்திருக்கிறார்களென்றும் உணர்ந்து கொண்டான். ஆனால் அது யாராகவிருக்குமென்பது அவன் என்ன சிந்தித்தும் புலப்படவில்லை.

திருவேங்கடம் தன்னாலானவரை கதவைத்தட்டியும் கூச்சலிட்டும் பார்த்தான். ஒருவரும் ஏனென்று கேட்பாரில்லை. கடைசியில் சோர்வடைந்து தன் அறையில் வந்து உட்கார்ந்து கொண்டான். நம்மை யாகாரமின்றிக் கொல்லக் கருதுகிறார்களோ என்ற பீதி யவனுக்குள்ளிருந்தது. ஆகையால் கடைசியில் கதவு திறக்கப்பட்டு கிட்டு தட்டில் ஆகாரம் கொண்டுவந்ததைக் கண்டதே நிம்மதியடைந்து

"ஆ! நல்ல ஆகாரம் மட்டும் தவருமல் கொடுத்தால் நீ நல்ல சினேகனே" என்ருன்.

கிட்டு, "அதுசரிதான்; நீ முன்பு செய்ததுபோல் மறுபடி அமர்க்களம்செய்தாயோ உன் கரத்தை யுடைத்து விடுவேன். அதனுல் ஒரு பயனுமில்லை" என்ருன்.

திருவேங்கடம் கோபத்தோடு, "உடைப்பாயா?" என்ருன். ஆனுல் அதற்குள் அவன் முன்பு காட்டிய வித்தை நினைவிற்கு வந்ததும் நல்லதனமாய் நடந்து கொள்வதுதான் அனுகூலம் என்றறிந்து, "சரிதான். நண்பனே! இதில் ஏதோ தவறு நடந்திருக்கிறது" என்ருன்.

கிட்டு:—இல்லையில்லை, ஒருதப்பிதமுமில்லை. என் எஜமான் ஒருபோதும் தவறுசெய்கிறவரல்ல. இதில் சற்றும் தவறில்லை.

திரு:—சரி, நான் எத்தனைநாள் இங்கிருப்பது!

கிட்டு:—எத்தனை நாளோ! ஒருவாரம், இரண்டுவாரம், மூன்றுவாரங்கள் இருக்கலாம்.

இதைக்கேட்ட திருவேங்கடம் கோபத்தோடு ஏதோ என்னமோகூற வாயெடுத்தவன் கோபத்தை யடக்கிக்கொண்டு பேசாமலிருந்துவிட்டான். இவ்வாறு மூன்று நாட்கள்கழிந்தன. இதுவரை யவனுக்கு ஆகாரம் முதலிய எல்லாசௌகரியங்களும் சரியாகவே நடந்தன. தான் இருக்கும் அறைகளை விட்டு வெளியில்செல்லமுடியாது என்ற ஒன்று தவிர மற்ற ஒரு குறையுமில்லை. நான்காவது நாள் திருவேங்கடம் தன் நிலைமையைக்குறித்துக் கவலையோடு சிந்திக்கலானுன். எப்படியாவது இங்கிருந்து தப்பித்துக்கொண்டு போய்விட வேண்டுமென்று தீர்மானித்துக்கொண்டான். அந்த ஜப்பான் சிறுவனைச் செயிப்பது முடியாத காரியம். நல்லதனத்தாலும் அவனை வசப்படுத்த முடியாதென்று புலப்

படுகிறது. வேறு எவ்வழியால் நாம் அவனை யேமாற்று வது என்று சிந்தித்தான்.

அதேதினம், அதாவது நான்காவது நாள் சில்லறைச் சாமான்கள் விற்கும் ஒருவன் அங்கு வந்து கதவைத் தட்டினான். கிட்டு போய்க் கதவைத் திறந்ததும் அம்மனிதன் தன் தோள்மேலிருந்த பையோடு உள்ளே வந்தான். அவன் முன் அறையின் அலங்காரங்களையும் அங்கிருந்த புத்தகசாலையையும் பார்த்து "பேஷ் நேர்த்தியாயிருக் கிறது. நீ ஜப்பான் தேசத்தான் போலிருக்கிறது. மிக்க நல்லவர்கள்" என்றான்.

அவ்வாறு பேசியதே கிட்டு அவன் விஷயத்தில் பிரீதி யடைந்து மரியாதையாக நடந்துகொண்டான். வந்த மனிதன் அவனை நோக்கி "உன் எஜமான் பென்ஸில் சீவும் நூதனக்கருவி வைத்துக்கொண் டிருக்கிறாரா? நான் அத்தகைய சாமான்களின் வியாபாரத்தில் ஒரு காரியஸ்தன். புதுமாதிரியான சரக்கு வரும்போது அதில் தக்க பெரிய மனிதருக்கு மாதிரியாக ஒன்று அளித்தால் பிறகு அது நன்றாக விலைப்படும் என்று அப்படிச் செய்கிறோம்" என்று தன் பையை யவிழ்த்து ஒரு கருவியை யெடுத்துக்காட்டி "இம்மாதிரி உன் எஜமான் உபயோகிக்கிறாரா?" என்றான்.

கிட்டு அவன் பாஷையைப் பூராக அறிந்துகொள்ளா விட்டாலும் அவன் காட்டிய அபிநயத்தால் ஒருவாறு சங்கதியை யறிந்துகொண்டு "இது உதவாது" என்றான்.

அம்மனிதன்:—ஏன், உன் எஜமானிடம் இத்தகைய பென்ஸல் சீவும் கருவி இருக்கிறதோ?

கிட்டு:—இல்லை.

அம்மனிதன்:—முன்பு வைத்துக்கொண் டிருந்தாரோ?

கிட்டு:—ஆம்.

அம்மனிதன்:—ஆனால் அது இப்படிப்பட்டதல்லவே?

கிட்டு:—இதேமாதிரிதான்.

அதன் பிறகு அம்மனிதன் தந்திரமாய்ப் பேசிய மாதிரியால் கடைசியில் கிட்டு மேஜை முழுதும் தேடி அதேமாதிரி யொன்று எடுத்துவந்து ஜயமடைந்தவன் போல இதோபார் இதேமாதிரி யென்றான்.

அம்மனிதன் தன் சாமான் விற்பனையாகாதே யென்று சோர்வடைந்தவன் போல் தன் சாமானைப் பையில் போட்டுக்கொண்டு சிறுவனை நோக்கி, "என் உன் எஜமான் இப்போதிதை யுபயோகிப்பதில்லை? அதோ மேஜைமேலிருக்கும் பென்ஸல் கத்தியால் சீவப்பட்டிருக்கிறதே" என்றான்.

கிட்டு "ஆம் இரண்டு மூன்று வாரங்களாக உபயோகிப்பதில்லை" என்றான். அம்மனிதன் "ஆனால் எதுமுதல்" என்று அங்கிருந்த தேதிகாட்டும் படத்தை யெடுத்துச் சிறுவனிடமளித்து "என்று முதல் கூறு பார்ப்போம்?" என்றான்.

கிட்டு அப்படத்தைப்பார்த்து அதில் ஒரு தேதியைச் சுட்டிக்காட்டி "அன்றுதான் இதை யுள்ளே வைத்துவிடச் சொல்லி எல்லா பென்ஸில்களையும் கத்தியில் சீவினர். அன்று நான் பிறந்ததினமாதலின் என் எஜமான் ஏதேனும் பரிசளிப்பார் என்று கருதினேன். அதனால் அந்தத்தேதி நன்றாகக் கவனமிருக்கிறது-ஆனால் எஜமான் பரிசளிக்கவில்லை" என்றான்.

அம்மனிதன்:—"சே சே! அப்படி யவர் செய்யலாகாது. சரி. அவர் தம்மிடத்திலிருக்கும் கருவியையே யுபயோகிக்காமல் விட்டுவிட்டபோது நான் ஒன்று கொடுப்பதில் பயனில்லை. நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்றான். அந்த ஆள் சென்றதும் கிட்டு கதவை மூடிவிட்டான். கிட்டு கூறியதேதி கொலை நடந்த தினத்திற்கு மறுநாள்.

நேயர்களே! அம்மனிதன்—அவ்வாறு வந்து பென்ஸில் சீவும் கருவியைப்பற்றி விசாரித்து உளவறிந்து சென்றவன் நமது ஆனந்தலிங்கே-ஆனந்தலிங் அங்கு வந்தது திருவேங்கடத்திற்குத் தெரியாது. திருவேங்கடம் அங்கிருப்பது ஆனந்தலிங்குக்குத் தெரியாது.

திருவேங்கடம் அங்கு அடைபட்டு ஒருவாரமாய்விட்டது. ஒருநாள் அவன் உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையிலிருந்து கடைசியில் ஒரு வழி கண்டுபிடித்தான். ஆனால் அதை நிறைவேற்றக் கிட்டுவின் உதவியைப் பெறவேண்டும். ஆயினும் காரணத்தை யவனுக்கு மறைத்தே கூறவேண்டும். ஆகையால் கிட்டு சற்றுநேரங்கழித்துப் போசனம்கொண்டு வந்தபோது திருவேங்கடம் அவனிடம் மிக்க சினேகபாவமாகப் பேசி "எனக்குப் பல்நோயாக விருக்கிறது. தயவு செய்து எஃகுப் பல்குச்சி யொன்று கொடுத்தால் நலம்" என்றான். கிட்டு ஜீவகாருணிய முடையவனானதால் உடனே இரண்டு பற்குச்சிகள் கொடுத்தான்.

கிட்டு போசனம் அளித்துச் சென்றபின் திருவேங்கடம் அந்த இரண்டு பற்குச்சிகளாலும் சுவரிலிருந்த ஒரு ஆணியைக் கழற்றி அதனால் மெதுவாய்க் கதவிலிருந்த பூட்டைக் கழற்றிவிட்டு இரண்டு அடுக்குகளைக் கடந்து கீழே யிறங்கினான். அங்கிருந்த ஒரு அறை ஸ்திரீவசிக்கும் அறை யென்று தெரிந்தது. பிறகு இன்னொரு அறையைப் பார்த்தான். அது ஒரு பிரம்மசாரி யிருக்கும் அறை யென்று தெரிந்தது.

அங்கு சில படங்களிருந்தன. திருவேங்கடம் யாவற்றையும் பார்த்தான். கடைசியில் அச்சுதம்பிள்ளை தான் பள்ளூர் இரயில் ஸ்டேஷனில் பிடித்த புகைப்படம் என்று தனக்குக் காட்டிய அதேமாதிரி படம் ஒன்று அங்கிருக்கக் கண்டான். "ஒகோ! இந்த வீட்டுக்காரன் அச்சுதம்பிள்ளை

யின் சிநேகனாக விருக்கவேண்டும்-அப்படிக்கின்றி அவன் விரோதியாக விருந்தால் அச்சுதம்பிள்ளையின் கட்சிக்கு நாம் அனுகூலம் செய்து விடுவோமென்று இம்மாதிரி செய்திருக்கவேண்டும்'' என்று கருதினான்.

எது உண்மையென்று அவனுக்குப் புலப்படவில்லை. "அடடா ஆனந்தலிங்கிடம் இதைக் கூறச் சந்தர்ப்பமிருந்தால்...ஆ! இங்கிருக்கும் டெலிபோன் மூலமாகப் பேசுவதாயின்...கிட்டு உடனே வந்து விடுவான். மேலும் நாம் எந்த வீட்டிலிருக்கிறோமென்று கூற முடியாது'' என்று சிந்தித்துக்கொண்டு அங்கிருந்த அலமாரி பெட்டி, மூலை முடுக்கு யாவும் சோதித்தான்.

அவன் முயற்சி வீண் போகவில்லை. இரண்டு பொருள்கள் அவனிடம் சிக்கின. முதலாவது-ஈட்டிக்கோல். அதாவது கைக்கோல் போல் காணப்படுவதும் ஆனால் அதன் பிடியை யிழுத்தால் சன்னமான ஈட்டி கைக்கு வருவதுமான ஒரு கருவி. அது அங்கிருந்த சில கோல்களோடு கூட விருந்தது. திருவேங்கடம் அதைக் கண்டதும் ஆ! இதுவே கொலை செய்த ஆயுதமாக விருக்கலாகும் என்று எண்ணினான். அதோடு கொலை நடந்த விடத்தில் அகப்பட்ட பொத்தானுக்குரிய பாதரட்சையும் அங்கிருந்தது. அதில் ஒரு பொத்தான் இல்லை. மீதி யிருப்பவை தன்னிடம் சிக்கிய பொத்தானைப் போன்றவையே. உடனே "ஆ! இதுவே கொலை செய்தவன் வீடாக இருக்க வேண்டும்'' என்று அவன் புத்தியிற்பட்டது.

அதன் பிறகு அங்கிருந்த ஒரு சிறு கதவைத் திறந்தான். அங்கு கீழிருந்து மேல்மாடி வரையில் செல்லும் ஒரு துவாரம் இருந்தது. அது மேலிருந்து வண்ணானுக்குப் போடும் துணிகளை ஒரு கூடையில் போட்டுக் கீழிறக்கும் வழி. மேலே செல்லும் வழி தான் இருக்கும் அறை

வரையும் செல்கிறது. யாவும் பார்த்துக்கொண்ட பின் திருவேங்கடம் பேசாமல் தன் அறைக்குச் சென்று கதவை மூடிக்கொண்டான். அதன் பிறகு தன் அறையின் உள் ளறையில் பார்த்தபோது அங்கும் ஒரு சிறு கதவிருந்தது. அதைத் திறந்ததும் மேல்கண்ட துவாரம் இருந்தது. உடனே அவன் மனதில் ஒரு யோசனை யுதித்தது. அதாவது இவ்வழியேதான் நாம் தப்பித்துக்கொண்டு செல்ல வேண்டும் என்று துணிந்தான். ஆனால் அப்படியே குதித்தால் கைகால் ஒடிந்துவிடும். அதற்கு ஒரு யோசனை செய்தான்-அதாவது "அங்கிருந்த மெத்தைகள் கம்பளிகள் திண்டு தலையணிகள் யாவற்றையும் அப்பள்ளத்தில் போட்டு அதன்மேல் குதித்து விடுவோம். அப்படி கைகால் உடைந்து வைத்தியசாலைக்குச் செல்வதாயின் இங்கிருப்பதை விட அதுமேல் தான்" என்று தீர்மானித்துக்கொண்டான்.

அந்த யோசனை வந்ததும் ஒரு விநாடிகூட அங்கு தாமதிக்க அவனுக்கு மனமில்லை. உடனே அங்கிருந்த மெத்தை திண்டு போர்வைகள் தலையணிகள் யாவற்றையும் அப்பள்ளத்தில் போட்டுக் குதித்துவிட்டான். நற்காலமாய் அவனுக்கு அடிபடவில்லை. கீழ்க்கட்டில் அத்துவாரத்திலிருந்து வெளியிற் செல்லும் ஒரு வழியிருந்தது. திருவேங்கடம் அவ்வழியாகத் துரிதமாய் வெளியிற் சென்றான்.

வீதியில் ஓடினால் பார்ப்பவர்களுக்குச் சந்தேகமுண்டாகுமென்று கருதி அவ்வீதியைக் கடக்குமட்டும் நிதானமாய்ச் சென்று பிறகு சரசரவென்று நடந்தான். ஆனால் அவ்வீட்டின் இலக்கத்தையும் வீதியின் பெயரையும் பார்த்துக்கொண்டு சென்றான்.

## 23-வது அத்தியாயம்.

சிறையிலிருந்து தப்பித்துக்கொண்ட திருவேங்கடம் நேராய் டெலிபோன் இருக்குமிடத்திற்குச் சென்று முன்னே தன் சிறிய தாய்க்கு "என்னைப்பற்றிக் கலக்கமுற வேண்டாம். நான் ஒரு முக்கியமான வேலையாய் வெளியிலிருக்கிறேன். வந்தபின் யாவும் கூறுகிறேன். நீ பயப்பட வேண்டாம்" என்று கூறினன். பிறகு ஆனந்தவலிங் இருக்குமிடத்தில் கேட்டான். ஆனந்தவலிங் அச்சமயம் தன் காரியாலயத்திலில்லை. அவனுடைய காரியஸ்தனிருந்தான். திருவேங்கடம் "நான் உடனே அவரிடம் பேச வேண்டும். அவர் எங்கிருந்தாலும் காரியாலயத்திற்கு வந்திருக்கும்படி ஏற்பாடு செய். மிக்க முக்கியமான விஷயம்" என்று கூறினன். காரியஸ்தன் அவ்வாறே செய்கிறேன் என்றான்.

அதன்படியே திருவேங்கடம் அங்கு சென்றபோது ஆனந்தவலிங் ஆயத்தமாயிருந்தான். அவன் திருவேங்கடத்தின் இருகரங்களையும் அன்போடு பற்றிக்கொண்டு தன் இரகசிய அறைக்கு அவனை யழைத்துச்சென்று ஆசனத்தில் அமர்த்தியபின், "திருவேங்கடம்! இனி உன் சரித்திரத்தைக் கூறு பார்ப்போம்" என்றான்.

திருவேங்கடம்:—ஆ! கூறவேண்டியது அதிகமாயிருக்கிறது. முன்னே விசாரணை யெப்படி யிருக்கிறது? நான் பிடிபட்டதுமுதல் இங்கு நடக்கும் சங்கதிகளைப்பற்றிய பத்திரிகையைக் காணவேயில்லை. இப்போது வரும் போது வழியில் ஒன்று வாங்கக்கருதினேன். ஆனால் என் கவனமெல்லாம் இந்தப் படத்தின்மே லிருந்தது. இதோ இதைப் பார்" என்று தன்னிடமிருந்த ஒரு படத்தை யெடுத்து ஆனந்தவலிங்கிடமளித்து, "இது

அச்சுதம்பிள்ளை கொலைநடந்ததினம் பள்ளூரிலிருந்த போது பிடிக்கப்பட்டதென்று கூறப்படுகிறது. அவன் அன்று பள்ளூரிலிருந்தானென்பது உனக்குத் தெரியுமல்லவா" என்றான்.

ஆனந்தஸிங்:—ஆம். அவன் அங்கிருந்து இரத்தினசாமிப் பிள்ளைக்குத் தந்தி கொடுத்திருக்கிறான். இம்மாதிரி படத்தைக்கூட நான் பார்த்தேன். ஆனால் அவன் அன்று அங்கில்லையென்று ருசுப்படுத்தக்கூடுமாயின் நலமாகவிருக்கும்.

திரு:—அவன் அன்று அங்கிருந்ததாகவே வைத்துக்கொள்வோம். ஆனால் இப்படம் அன்று பிடிக்கப்பட்டதல்ல.

ஆனந்தஸிங் வியப்படைந்து உனக்கு எப்படித் தெரியும் என்றான். திருவேங்கடம் "இப்படமும் வாரப்பத்திரிகைகளும் ஒருபுத்தகக் கோர்வையில் கோக்கப்பட்டிருக்கின்றன. அப்படத்தின்மேல் கொலை நடந்ததற்குப் பின் மூன்று நான்கு வாரங்களின் சஞ்சிகைகள் கோக்கப்பட்டிருக்கின்றன. நான் நன்றாய் அச்சஞ்சிகைகளையெல்லாம் கவனித்துப்பார்த்தேன்" என்றான்.

ஆனந்த:—"நீ செய்தது மிக்க புத்தி சாமார்த்தியமான வேலை. இருக்கட்டும், நீ எங்கு சிக்கிக்கொண்டாய்? அச்சங்கதியைக்கூறு" என்றான்.

அதன்மேல் திருவேங்கடம் தனக்கு டெலிபோனில் சங்கதி வந்தது முதல் தான் அந்த வீட்டில் அடைக்கப்பட்டு அங்கிருந்து தப்பித்துக்கொண்டு வந்தவரையில் கூறினான். அவன் அந்த ஈட்டிவைத்தகோலையும், தன்னிடம் அகப்பட்ட பொத்தான் இருந்த பாதரட்சையையும் கண்டுபிடித்த சங்கதியையுங் கூறியதே ஆனந்தஸிங் மிக்க வியப்படைந்து "அது பாதரட்சைப் பொத்தான்தானா?" என்றான்.

திரு:—ஆம். நான் வேணுமென்றே யதைப்பற்றிப் பொய் யாய்க் கூறியபோதெல்லாம் பின்னால் அதனால் நன் மையேயென்று தெரிந்துகொண்டேன்.

ஆனந்த:—உனக்கு அகப்பட்டிருப்பவை நல்ல உளவுகளே. ஆயினும் நீ அவற்றைப்பற்றி அளவுமீறி நம்பகம் வைத்துக்கொள்ள வேண்டாம்.

திரு:—என்? நீயே போய் அந்தக் கோலையும் பாதரட்சை யையும் எடுத்துக்கொண்டு வரலாமே. அக்கோல் நான் கண்டெடுத்த மண்மொத்தையிலுள்ள அடை யாளத்திற்குச்சரியாகவும், பாதரட்சையில் நான் கண்டெடுத்தமாதிரி பொத்தான்களுமே யிருந்தால் அப்போதேனும் உண்மை புலப்படுமல்லவோ?"

ஆனந்த:—"திருவேங்கடம்! நீ அதிசயமான வேலை செய்திருக்கிறாய். இருக்கட்டும். இரத்தினசாமிப் பிள்ளை கொலை செய்திருப்பதைப்பற்றி ஒரு தென் னாட்டாள் டெலிபோனில் அறிவித்தாளென்றும், அந்த வீட்டில் இருமிக்கொண்டிருந்த குழந்தைகள் இருந்ததாகவும், போனோகிராப்பில் பாடிக்கொண் டிருந்ததாகவும் கட்டிடவேலை நடக்கும் சத்தம்கேட்ட தாகவும் போலீஸ் இன்ஸ்பெக்டர் கூறினது உனக்கு நினைவிருக்கிறதா?" என்றான்.

திரு:—ஆகா. ஒவ்வொன்றும் நன்றாய் கவனமிருக்கிறது.

ஆனந்த:—நான் சுகாதாரக் காரியாலயத்திற்குச் சென்று விசாரித்துப்பார்த்தேன். தென்னாட்டார் இருக்கும் எந்த வீதிகளில் குழந்தைகளுக்கு இருமல் என்பதை யறிந்துகொண்டேன். அங்கு சென்று பார்த்தால் டெலிபோன் சங்கதி யனுப்பிய மாதைக் கண்டு பிடிக்கலாம்.

திருவேங்கடம் "ஆம். ஆம். உடனே புறப்படலாம்" என்றான். தட்சணம் இருவரும் ஒரு வண்டியில் ஏறிக் கொண்டு புறப்பட்டார்கள். ஆனந்தலிங் குறித்த ஒரு வீதியிற் சேர்ந்ததும் வண்டியை நிறுத்தச்சொல்லித் திரு வேங்கடத்தோடு கீழே இறங்கினான். அந்த வீதியும் அண்டையிலுள்ள வீதிகளும் தென்னாட்டார் வசிக்கும் பிரதேசம்.

அங்கு ஆனந்தலிங் திருவேங்கடத்தை நோக்கி நீ அந்த வீட்டைக் கண்டுபிடி என்று கூறிவிட்டுத், தான் ஒரு பக்கம் பார்க்கத்தொடங்கினான். திருவேங்கடம் அவ்வாறே பார்த்துக்கொண்டே எங்கு புதிதாய்க்கட்டப்பட்ட வீடிருக் கிறதென்று கவனித்தான். அங்கு முன்பு கடையாக விருந்து சமீபகாலத்தில் வாசஸ்தலமாக மாற்றப்பட்ட ஒரு வீட்டைக்கண்டதும் ஆவலோடு அதற்குள் நுழைந்து மறுபடி வெளியில்வந்து ஆனந்தலிங்கைக் கூவி யழைத்து, "இதோ ! இதோ விருக்கிறது" என்றான்.

ஆனந்தலிங் உடனே சென்று அவ்வீட்டிற்குள் நுழைந்தான். அங்கு தென்னாட்டுமாது ஒருத்தி யிருந் தாள். சிலர் இருமிக்கொண்டும் சிலர் சச்சரவு செய்து கொண்டு மிருந்தார்கள். போனோகிராப் பெட்டி யொன்றி ருந்தது. திருவேங்கடம் அப்பெட்டியிலிருந்த பாட்டுத் தட்டுகளை யெடுத்து ஒவ்வொன்றாய்ப்பார்த்து டெலிபோன் மூலமாய் இன்ஸ்பெக்டர் கேட்ட பாட்டுத்தட்டை யெடுத்து ஆனந்தலிங்கிடம் காட்டினான். கடைசியில் இருந்த டெலிபோன் மூலமாய் போலீஸ் தலைமை ஸ்தலத் திலிருக்கும் இன்ஸ்பெக்டர் கள்ளழகம்பிள்ளையைக் கூப் பிட்டு அப்பாட்டுத்தானா அவன் அன்று கேட்டதென்று வினவினான்.

இன்ஸ்பெக்டர் ஆம் என்றான்.

ஆனந்தலிங் உடனே அங்கிருந்த மாதை யழைத்து வந்து கொலை நடந்ததினம் கூறிய சமாசாரத்தை மறுபடி டெலிபோன் மூலமாய்க் கூறச்செய்தான். இதைக் கேட்டதே இன்ஸ்பெக்டர் "அதே குரல்! அதே மாது! அதே மாது அன்று சங்கதி கூறியவள்" என்றான்.

அம்மாது மிக்க திகிலடைந்து விட்டாள். ஆனால் ஆனந்தலிங் அவளுக்குத் தேறுதல்கூறி நீ உண்மையாக நடந்ததைக் கூறிவிட்டால் உனக்கொருகெடுதியும் வராது என்றான்.

அதன்மேல் அம்மாது பின்வருமாறு கூறினாள்:— "அய்யா! அன்றையதினம் திடீலென்று ஒருமனிதன் இங்குவந்து அம்மாதின் சங்கதியை டெலிபோனில் கூறும் படி என்னைக் கட்டாயப்படுத்தினான். அவன் எப்படிக் கூறுகிறானே அப்படியே சொல்லச்சொன்னான். அது முதல் எனக்குப் பெருந்திகிலாகவே யிருக்கிறது. அவன் என்னிடம் பத்து டாலர்கள் கொடுத்தான். அதைச் செலவுசெய்ய எனக்கு மனம் பிடிக்கவேயில்லை. ஏனெனில் அது கொலைப்பணம் என்று எனக்குப் புலப்படுகிறது" என்றாள்.

**ஆனந்த:**—"அந்த ஆள் எப்படியிருந்தான் கூறு பார்ப்போம்" என்றான்.

**அம்மாது:**—நான் சரியாக அவனைப்பார்க்க முடியவில்லை. அவன் என்னிடம் பேசும்போது முகத்திற்கு ஒரு பத்திரிகையை வைத்து மறைத்துக்கொண் டிருந்தான்.

**ஆனந்த:**—அவன் யெப்படிக் கட்டாயப்படுத்தினான்?

**அம்:**—அவன் கையில் ஒருகூரான ஈட்டி வைத்துக்கொண்டு என்னைக் கொல்வதாய்ப் பயப்படுத்தினான்.

**ஆனந்த:**—அது எம்மாதிரி ஈட்டி?

அம்மாது பீதியால் "அதைச் சரியாய்க்கூறமுடியாது; ஆனால் அதைப்பார்த்தால்தெரிந்துகொள்வேன்" என்றாள்.

இன்னும் இரண்டொரு கேள்விகள் கேட்டபின் ஆனந்தஸிங் புறப்பட ஆயத்தப்பட்டான். ஆனால் திருவேங்கடம் அம்மாதினருகில் சென்று நல்லதனமாய், "ஏனம்மா! குழந்தைகளுக்கு இருமலுக்கு என்ன ஔஷதம் கொடுத்தாய்? இருமல் திராவகமா?" என்றான். அம்மாது, "அல்ல அல்ல. இருமல் சஞ்சீவிச்சூரணம் கொண்டுவந்து புகை போட்டேன்" என்றாள். திருவேங்கடம் "அம்மனிதன் வந்து உன்னிடம் பேசிக்கொண்டிருந்தபோது புகைபோட்டிருந்தாயோ?" என்றாள்.

அம்மாது ஆம். ஆம். என்றாள்.

திருவேங்கடம் சந்தோஷமாய், "பேஷ் பேஷ் நீ நல்ல மனுஷி" என்றான்.

அதன்பிறகு அவனும் ஆனந்தஸிங்கும் அங்கிருந்து நேராகத் துரைத்தனவக்கீலின் காரியாலயத்திற்குச் சென்றார்கள். வழியில் திருவேங்கடம் ஆனந்தஸிங்கிடம் அனேகம் சங்கதிகளைக் கூறினான். இவர்கள் வக்கீலின் காரியாலயத்திற்குச் சென்றபோது வக்கீல் அங்கில்லை. நீதிச் சபைக்குச் சென்றிருந்தார்.

ஆனந்தஸிங் அங்கிருந்த அவருடைய காரிய தரிசியிடம் "இப்போதே யவருக்கு ஒரு முக்கியமான சமாசாரம் அனுப்பவேண்டும்" என்றான். காரியதரிசி "அவர் இக்கட்டிடத்தின் மற்றோர் பக்கத்திலிருக்கும் நீதிச்சபையில் இருக்கிறார். இப்போது அவருக்கு இடையூறுண்டாக்கலாகாது. உமது விவகாரம் சற்றுப் பொறுக்கலாமல்லவா?" என்றான்.

**ஆனந்த:**—"முடியாது. இது மிக்க முக்கியமான விஷயம்.

உடனே யிதை யவரிடமறிவிக்கவேண்டும். இதற்காக அவர் ஒருபோதும் கோபிக்கமாட்டார்" என்றான்.

ஆனந்தஸிங் ஒரு கடிதத்தில் சுருக்கமாகத்தான் ஏன் இப்போது அவரைக் காணவேண்டுமென்ற காரணத்தை யெழுதி யனுப்பிவிட்டுப் பின்னாலேயே நீதிச்சபைக்குச் சென்றான். அவனும் திருவேங்கடமும் அங்கு செல்லும் போது துரைத்தனவக்கீல் ஆனந்தஸிங் அனுப்பிய கடிதத்தை வாசித்துக்கொண் டிருக்கிறார். அதை வாசிக்க வாசிக்க அவர்முகத்தில் ஒருவித ஆச்சரியமான பிரகாசம் உண்டாயிற்று.

அதே சமயம் ஜூரிகள் ஆலோசனை செய்ய உள்ளே சென்றவர்கள் அப்போதுதான் வெளியில் வந்து உட்கார்ந்தார்கள். நீதவான் "ஜூரர்களே! நீங்கள் ஒரே ஒற்றுமையான அபிப்பிராயத்திற்கு வந்தீர்களா?" என்றார். ஜூரர்கள் "இலக்ஷ்மணன் குற்றவாளியே" யென்றார்கள்.

அச்சமயம் துரைத்தன வக்கீல் நியாயாதிபதியை நோக்கி "பிரபுவே, இதற்குமேல் விவகாரம் நடக்கலாகாதென்று நான் ஆட்சேபனை செய்யத் தக்க காரணம் இருக்கிறது" என்று கூறி நீதவானருகிற் சென்று மெதுவாகச் சற்றுநேரம் சம்பாஷித்தார். இரண்டொரு நிமிடங்கள் பேசியபின் நியாயாதிபதி "ஆனந்தஸிங்! தயவுசெய்து இங்குவாரும்" என்றார்.

**ஆனந்த:**—"நியாயாதிபதி யவர்களே! தயவு செய்து என் வாக்குமூலத்தைக் கேட்கப் பிரார்த்திக்கிறேன்" என்றான்.

ஆனந்தஸிங் என்ற பெயரைக் கேட்டதோடும் அவன் கூறிய வார்த்தைகளைக் கேட்டதோடும் அவனுடைய கம்பீரத்தோற்றத்தையும் கண்டதே, சபை முழுமையும் கிளர்ச்சி

யுண்டாயிற்று. ஆனால் அச்சுதம்பிள்ளை மட்டும் மிக்க கோபமான பார்வையாய் அவனை நோக்கினான்.

ஆனந்தவலிங் நீதவானை நோக்கி, "சமீப காலத்தில் இரத்தினசாமிப் பிள்ளையின் கொலையைப் பற்றிய விஷயத்தைக் கண்டறியும்படி நான் அமர்த்தப் பட்டபடியால் நான் கண்டுபிடித்த உளவுகளைக் கேட்கும்படி பிரார்த்திக்கிறேன்" என்றான்.

நியாயாதிபதி:—"ஆனந்தவலிங்! நீ கண்டுபிடித்த உளவுகளை நீயே யொழுங்காய்க் கூறு" என்றார்.

ஆனந்தவலிங் கீழ்க்கண்டபடி கூறினான்:—

"இரத்தினசாமிப்பிள்ளை இறக்கும் தறுவாயில் என்னைக் கொன்றது இலக்ஷ்மணன் என்று கூறியது யாவருமறிந்த விஷயமே. முதலாவது அது இராமர் இலக்ஷ்மணர் என்ற சந்தர்ப்பத்தைப்போல் "எனக்குச் சகோதரன் போன்ற ஒருவன் என்னைக் கொன்றான்" என்று கருதப்பட்டது. பிறகு இரத்தினசாமிப் பிள்ளையின் புத்திரன் பெயர் இலட்சுமணன் என்றிருப்பதால் அவனையே அவ்வார்த்தை குறிக்கிறதென்று தீர்மானிக்கப் பட்டது. இவை இரண்டையு மன்றி மூன்றாவதொன்றை யது குறிக்கிறதென்று நான் கண்டுபிடித்தேன். அதை ரூபிக்க ஆயத்தமாக விருக்கிறேன். இலக்ஷ்மணன் என்ற ஒருவன் ஒருவித ஆயுதத்தைக் கண்டுபிடித்தான். அது பார்ப்பதற்கு ஒரு சாதாரண கைக்கோல் போலவேயிருக்கும். ஆனால் அதன் கைப்பிடியைப்பிடித்திழுத்தால் அதிலிருந்து கூர்மையான ஒரு ஈட்டி வெளியில் வரும். அக்கோலுக்கு இலக்ஷ்மணன் என்றே பெயர் வைக்கப்பட்டது. அதிகாரிகளுக்குச் சங்கதி தெரிந்தபோது, அத்தகைய கோலை வைத்துக்கொண்டிருப்பது சட்ட விரோதமென்று தீர்மானித்து விட்டார்கள். அந்த ஆயுதமே இரத்தினசாமிப்

பிள்ளையைக்கொன்றது. அவர் அதைத்தான் இலக்ஷ்மணன் கொன்றது என்றார். அவர் கொல்லப்பட்டிருந்த விடத்தில் தரையில் அத்தகைய கோல் குத்தப்பட்ட அடையாளம் இருந்தது. அதன்மேல் அது யாருடையதென்று கண்டு பிடிக்கப்பட்டபோது, குற்றவாளியின் பட்சத்தில் வக்கீலாக விருக்கும் இதே அச்சுதம்பிள்ளையின் கோல் என்று தெரிந்தது" என்றான்.

இச்சங்கதியைக் கேட்டதே சபையில் எங்கும் பெருங் கிளர்ச்சியுண்டாய் விட்டது. அச்சுதம் பிள்ளையின் முகம் ஒரு சலவைக்கல்லைப் போலாய் விட்டது. அவன் ஆனந்தலிங் இன்னும் என்னதான் கூறுகிறான் என்று கவனிப்பவன் போல் பேசாமலிருந்தான்.

ஆனந்தலிங் "அந்தக் கைக்கோல் இதோ விருக்கிறது." என்று கூறிக்கொண்டே பக்கத்திலிருந்த ஒருவன் கையில் வைத்துக்கொண்டிருந்த துணி சுற்றப்பட்ட கோலை யெடுத்துக் காட்டி, அச்சுதம் பிள்ளையை நோக்கி "இது உம்முடையதா?" என்றான்.

அச்சுதம்பிள்ளை அதை அசட்டையாய் நோக்கி "அல்ல, இதை நான் பார்த்ததேயில்லை" என்றான்.

ஆனந்தலிங் "இது உமது உடுப்பு அறையிலிருந்த ஒரு பீரோவிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டது" என்றான்.

அச்சு:—யாரால் கண்டுபிடிக்கப் பட்டது?

ஆனந்த:—இதோ விருக்கும் திருவேங்கடம் என்ற வாலிபனால்.

அச்சுதம்பிள்ளை மிக்க வெறுப்போடு "இந்தப் புளுகனா?" என்றான்.

ஆனந்த:—"இப்போது அவன் வார்த்தையைப் பற்றி யல்ல கேள்வி, இது உம்முடைய அறையிலிருந்து கண்டு பிடிக்கப்பட்டது. இதில் கூர்மையான ஈட்டியிருக்

கிறது'' என்று கூறிக்கொண்டே அதன் கைப்பிடியை யிழுத்து நீண்ட ஒரு ஈட்டியை யெடுத்து யாவர்க்கும் பகிரங்கமாய்க் காட்டினன். அதைக்கண்ட அனை வரும் நடுங்கி விட்டார்கள்.

ஆனந்தஸிங் அச்சுதம்பிள்ளையின் வார்த்தைகளைச் சட்டை செய்யாமல் நியாயாதிபதியை நோக்கி "இரண்டாவது ருஜுக் கொலை நடந்த விடத்தில் கண்டெடுக்கப்பட்ட பொத்தான். இது அச்சுதம் பிள்ளையின் பாதரட்சையி லிருந்து விழுந்த பொத்தானே யென்று பூரணமாய் ருசுப் படுத்த ஆயத்தமாயிருக்கிறேன். ஆயினும் இவை அச்சுதம் பிள்ளையை நேராய் இதில் சம்பந்தப் படுத்தவில்லை யெனலாம். ஆனல் நான் வேறு சாட்சியைக் கொண்டு இதை ருசுப்படுத்துகிறேன்'' என்று கூறிவிட்டு அத்தென்னுட்டு ஸதிரீயின் சங்கதியை விவரமாய்க் கூறியபின் பின் வருமாறு இயம்பினன்:—

"இவை யொன்றேடொன்று எப்படிச் சம்பந்தப் படுகின்றன வெனில், கொலை நடந்த மறு நாள் மரண விசாரணை நடந்தது. அப்போது அச்சுதம்பிள்ளையின் உடையில் ஒருவித மணம் இருந்ததைப் புத்திசாலியாகிய இத்திரு வேங்கடம் உணர்ந்து கொண்டான். அந்த மணம் குழந்தைகளுக்கு வரும் இருமலுக்குப் புகைபோடும் ஒருவிதச் சூரணத்தின் மணம். கொலையாளிதன் வேலையை முடித்து விட்டபின் அத்தென்னுட்டு மாதிடம் சென்று இதே யீட்டியைக் காட்டி யவளைக் கொன்று விடுவதாகப் பயமுறுத்தித் தான் கூறுகிறபடியே போலீஸ் தலைமை ஸ்தானத்திற்கு டெலிபோன் மூலமாய் அச்சங்கதியைக் கூறும் வண்ணம் கட்டாயப் படுத்தினன். அச்சமயம் அம்மாது தன் குழந்தைகளுக்கு இருமலிருந்ததால் அம்மருந்தைப் புகை போட்டிருந்தாள். அது இரண்டொரு நிமிடங்கள் அங்

கிருந்தாலும் உடையில் பிடித்துக் கொண்டு கொஞ்சகால மட்டும் போகாமலிருக்கும் சுபாவமுடையது.

குற்றவாளி அம்மாதைக்கொண்டு போலீஸாருக்குச் சங்கதி யறிவித்த இத்தந்திரமான காரியம் வெளிவரவே வராதுதான். ஆனால் இச்சிறுவன் அம்மருந்தின் புகை மணத்தை யறிந்திருப்பதால் அதை யுணர்ந்ததும், கொலைச் சங்கதியை யனுப்பிய அம்மாதின் வீட்டில் சிறுவர்களுக்கு இருமல் இருந்தது என்ற சங்கதியை அதோடு பொருத்தி உண்மையைக் கிரகித்துக்கொண்டான்" என்றான்.

**அச்சுதம் பிள்ளை**:—"இவையனைத்தும் புளுகன் என்று பெயர் பெற்ற இந்த நாடோடிச் சிறுவன் கட்டிய பொய்க்கதைகள்" என்றான்.

ஆனந்தலிங் அவன் பேச்சைச் சட்டை செய்யாமல் பேசத்தொடங்கினான்.

"இவன் கொலைசெய்ய வேண்டியதற்கு ஏதேனும் ஒரு உத்தேசமிருக்கவேண்டும். கொலைசெய்யப்பட்டவருடைய மரண சாசனத்தில் கண்ட நிபந்தனைகளின்படி இவன் இரத்னசாமிப் பிள்ளையின் வளர்ப்புப் புத்திரியாகிய அம்புஜத்தை மணம் புரியவேண்டும்; அது மூலமாய் ஆஸ்தியின் பெரும் பாகத்தை யிவனடைகிறான். இது மட்டுமல்ல; அக்கன்னிகை யிவனை மணம் புரியா விட்டால் ஐம்பதினாயிரம் டாலர் மட்டுமே யவள் அடையவேண்டுமென்றும் மற்ற ஆஸ்தி சிலருக்கு வைத்ததுபோக, முழுமைக்கும் இவனே பாதுகாவலனென்றும் இருக்கிறது. இறந்தவர் அம்மாதிரி எழுதி யிருப்பார் என்பது வியப்பாகவே யாவர்க்கும் தோற்றும்-ஆகையால் நான் அந்த மரண சாசனத்தைச் சோதித்துப் பார்த்தேன். அதில் ஒரு பாகம் கள்ளத்தனமாக, இரத்னசாமிப் பிள்ளையின் மரணத்

திற்குப் பின் சேர்க்கப்பட்டதே யென்று தெரிந்தது. அதைப் பூரணமாக ருசுப்படுத்த ஆயத்தமாயிருக்கிறேன். அம்மரணசாசனம் இதே அச்சுதம்பிள்ளையால் எழுதப்பட்டது..." என்று கூறிவிட்டு ஆனந்தலிங் அச்சுதம்பிள்ளையின் முகத்தை யுற்று நோக்கி,

"இந்த அச்சுதம்பிள்ளை இரத்னசாமிப்பிள்ளை கொலையுண்டபின் சாவதானமாய்த் தனக்கு அநுகூலமான வார்த்தைகளை யதில் நுழைத்துவிட்டான்-அவை யெவை யெனில், 'அம்புஜம் அச்சுதம்பிள்ளையையே மணம்புரிந்து கொள்ளவேண்டும். இன்றேல் ஐம்பதாயிரம் டாலர் மட்டுமே பெறவேண்டும்' என்பவைகளே" என்றான்.

அச்சுதம்பிள்ளை ஆத்திரத்தோடெழுந்து "நீ யதை நிரூபிக்கமுடியாது" என்றான்.

ஆனந்தலிங் அவனைச் சட்டைசெய்து பார்க்காமலே நியாயாதிபதியை நோக்கியபடி "பிரபுவே! அதை மிக்க சுலபமாக நான் நிரூபிப்பேன். கொலை நடந்தபின் இது செய்யப்பட் டிருக்கிறது. அம்மரண சாசனத்தில் உள்ள மற்ற பாகத்திற்கும் இதற்கும் எழுத்தில் வித்தியாசம் இருப்பதை நான் எளிதில் நிரூபிக்கிறேன். ஆனல் சாதாரண கண்களுக்கு அது புலப்படாது. பூதக்கண்ணுடியில் பார்த்தால் தெளிவாய்ப் புலப்பட்டுவிடும்-நான் அதைச் சாத்திர யுக்தமாக ருசுப்படுத்த ஆயத்தமாயிருக்கிறேன்" என்றான்.

இதைக்கேட்ட திருவேங்கடம் கோபத்தை யடக்க முடியாமல் "ஒகோ! இந்த ஆசாமி அடியோடு உடாய்த்து விடப் பார்க்கிறான். இது முடியாது முடியாது" என்றான்.

அதற்குள் ஆனந்தலிங் "இரு இரு" என்று கூறிவிட்டுப் பேசத் தொடங்கவே நியாயாதிபதியும் திருவேங்கடத்

தைப் பொறு என்று சமிக்கையாகக் கையால் அமர்த்தி விட்டார்.

---

## 24-வது அத்தியாயம்.

### ஆனந்தஸிங் வாக்குமூலத் தொடர்ச்சி:—

ஆனந்தஸிங் நியாயாதிபதியை நோக்கி "பிரபுவே! அச்சுதம்பிள்ளை அன்று தான் வேறிடத்தில், அதாவது பள்ளூரில் இருந்ததாய் ருசுப்படுத்தலாம் என்று எண்ணி யிருக்கிறார்" என்றதே,

அச்சுதம்:—"நான் அன்று அங்குதானிருந்தேன். அன்று மாலை அங்கு வெளியான ஒரு பத்திரிகையை வாங்கி வந்திருக்கிறேன்" என்றான்.

ஆனந்தஸிங் அப்போதுதான் நேராக அச்சுதம் பிள்ளையை நோக்கி "நீ வாங்கியது அன்று மாலை பள்ளூரில் வெளியான பத்திரிகையே யென்பது உண்மைதான். ஆனால் அதை நீ கொலை நடந்த மறுதினம் எதற்கும் இது நமக்கு உதவியாக விருக்கட்டுமென்று இந்த நகரத்தில் பத்திரிகைகள் விற்கப்படும் ஒரு கடையில் வாங்கி யிருக்கிறாய் என்று நான் ருசுப்படுத்துகிறேன்" என்றான்.

இதைக்கேட்ட நியாயாதிபதி முதல் அங்கிருந்த அனைவரும் ஆனந்தஸிங் இவ்வுளவுகளைக் கண்டு பிடித்ததைப் பற்றிக் கரகோஷம் செய்து வியப்போடு அவனை நோக்கினார்கள்.

அச்சுதம்பிள்ளை யதை மறுத்துக் கூறாமல் "என்ன ஆபாசங்கள்! நான் கொலை நடந்த தினத்திற்கு முன்னாள் 'நாளைக்குப் பள்ளூருக்குச் செல்கிறே'னென்று இரத்ன சாமிப்பிள்ளைக்குக் கடிதம் எழுதி யிருக்கிறேன். அது அவர் ஜேபியிலிருந்து அகப்பட்டது" என்றான்.

ஆனந்த:—அகப்பட்டது உண்மையே. நீ அவரைக் கொலை செய்தபின் அக்கடிதத்தை அவர் சவத்தின் சட்டைச் சேபியில் வைத்தாய்.

அச்சு:—நான் பள்ளூரிலிருந்து அவருக்குத் தந்தி கொடுத்திருக்கிறேன். அதுவும் அவர் ஜேபியிலிருந்தது.

ஆனந்த:—அத்தந்தியும் நீயவர் சவத்தின் ஜேபியில் வைத்ததே. அது சாதாரணமாகத் தந்திகள் எவ்வாறு கடிதத்தில் எழுதப்பட்டு வருகின்றனவோ அவ்வாறு எழுதப்பட்டதேயன்றி எந்தத் தந்திக்கம்பியின் மூலமாகவும் வந்ததல்ல-அப்படி எந்தத் தந்திக்காரியாலயத்திலாவது நீ அதைக் கொடுத்து அவர்கள் அதையனுப்பியதாகத் தகவல் காட்ட உன்னால் முடியாது. நான் யாவும் சோதித்துப் பார்த்து உண்மையை ருசுப்படுத்தச் சித்தமாயிருக்கிறேன்.

நியாயாதிபதிகளே! இன்னும் வேண்டிய ருசுவுகள் பூரணமாகவிருக்கின்றன. ஒவ்வொன்றாய்க் கூறுகிறேன். கொலை நடந்த விடத்தில் ஒரு பென்ஸில் இருந்து கண்டெடுக்கப்பட்டது. அப்பென்ஸில் கொலையாளியாகிய அச்சுதம்பிள்ளை யுடையதே யென்று நான் ருசுப்படுத்துகிறேன். கொலை நடந்ததினம் வரையில் இந்த ஆள் தன்னிடமுள்ள பென்ஸில்களை யெல்லாம் தன்னிடமிருக்கும் பென்ஸில் சீவக் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கருவியாலேயே சீவிக்கொண்டிருந்தான். ஆனால் கொலை நடந்த விடத்தில் தன்பென்ஸில் கைசோர்ந்து விட்டதையறிந்து குற்றத்தை யன்னியர்மேல் சாட்டக்கருதி, மறுநாளே தன் பென்ஸில் சீவும் கருவியை வைத்துவிட்டுத் தன்னிடமிருந்த எல்லா பென்ஸில்களையும் கத்தியால் சீவி வைத்துவிட்டான். இவனிடம் வேலையாளாகவிருக்கும் கிட்டு என்பவன் மூலமாய் நான் இச்சங்கதிகளை யெல்லாமறிந்தேன்.

திரைத்தனவக்கில், "அதைவிட இவற்றை யெல்லாம் கண்டுபிடித்ததே மேலான புத்தி சாமார்த்தியம்" என்றார்.

ஆனந்த:—இக்கௌரவம் இதோ இருக்கும் திருவேங்கடம் என்ற சிறுவனுடையதே. மரண விசாரணையில் இவன் இப்பென்வில் விஷயத்தைக் கவனித்துத் தன் அபிப்பிராயத்தை என்னிடம் கூறினான். அதன்பிறகு நான் போய் ருசுவைக் கண்டுபிடித்தேன்.. இன்னொரு ருசு - அதாவது கொலை நடந்த விடத்தில் சந்தானம் என்பவனால் கண்டு பிடிக்கப்பட்ட கைக்குட்டை. முதலில் அது அவன்மேல் சந்தேகத்தை யுண்டாக்கியது. இரண்டாவது, அது சுந்தரம் என்பவனுடையது என்று தெரியவந்ததால் சுந்தரத்தின்மேல் சந்தேகம் உண்டாயிற்று. மூன்றாவதாக இலக்ஷ்மணன்தான் சுந்தரத்தின் குட்டையை யெடுத்து வந்தான் என்று அவன்மேல் சந்தேகம் உண்டாயிற்று. கடைசியில் அது உண்மையான கொலையாளியாகிய அச்சுதம்பிள்ளையையே காட்டிவிட்டது. எவ்வாறெனின், சுந்தரம் ஒரு காலத்தில் இதே அச்சுதம்பிள்ளையிடம் ஒரு இரகசியமான பெரிய உதவியைப் பெற்றிருக்கிறான். அதுமுதல் அவன் இந்த அச்சுதம்பிள்ளையின் கையில் பூரணமாய்ச் சிக்கிக்கொண் டிருக்கிறான். இந்த ஆள் அவனை யெப்படி வேண்டுமாயினும் ஆட்டலாம். இந்த ஆள் அவன் அறையிலிருந்த குட்டையை வேணுமென்றே-வேறு இரண்டொருவர்மேல் சந்தேகம் உண்டாக்குவதற்கே - எடுத்துப்போய்க் கொலை செய்தபின் அக்குட்டையை யிரத்தத்தில் தோய்த்து அங்கு போட்டுவிட்டான்.

"இந்த அற்புதமான குற்றவாளி தன் காரியங்களை யெல்லாம் மிக்க முன்யோசனையோடு அதிக சாமார்த்திய

மாகவே செய்ததில் அளவு மீறிவிட்டான். இவன் கொலை நடந்ததினம் பள்ளூரில் இருந்ததாக ஏற்பாடு செய்த கள்ளருசு மிக்க பூரணமானதே. ஆனால் அதிலும் அளவு மீறிய சாக்கிரதை யெடுத்துக் கொண்டுபோய்க் கடிதம், பொய்த்தந்தி, பத்திரிகை வாங்கியதாக ஏற்பாடு செய்தது, இவற்றோடு ஒரு பொய்ப்புகைப்படம் ஏற்படுத்திக் கொண்டது ஆகிய இவைகளே யிப்போது இவனைப் பூரணமாகக் காட்டிக் கொடுத்துவிட்டன. அந்தப் படத்தைப்பற்றிப் பிறகு கூறுகிறேன். இப்போது திருவேங்கடம் என்ற இச்சிறுவன் சாட்சியத்தைக்கேட்கப் பிரார்த்திக்கிறேன். இச்சிறுவன் குற்றவாளியால் சிறைப்பட்டது முதலிய கஷ்டங்களை யனுபவித்ததோடு பிராணபத்திற்கும் உள்ளாக்கப்பட்டிருக்கிறான்" என்றான்.

நியாயாதிபதி உடனே திருவேங்கடத்தைச் சாட்சிக் கூண்டில் ஏறச்செய்து "இந்த விஷயத்தில் உனக்குத் தெரிந்ததை யுன் வாய்ச்சொல்லாலேயே கூறு" என்றார்.

அதன்மேல் திருவேங்கடம் பின்வருமாறு கூறத் தொடங்கினான்:—

"இந்த அச்சுதம்பிள்ளை முதலில் நல்லதனமாய் எனக்கு வேலை சம்பாதித்துக் கொடுப்பதாகக் கூறினார். அச்சமயம் நான் சில உளவுகளைக் கண்டுபிடித்ததாக இவரிடம் போய்க் கூறச் சென்றிருந்தேன். இவர் ஏன் நமக்கு இத்தகைய உதவிசெய்ய முன்வரவேண்டுமென்று எனக்கு வியப்பாகவேயிருந்தது. ஆயினும் பள்ளூரில் தமது நண்பரான சேதுராம் என்ற வக்கீலுக்கு ஒரு சிறுவன் வேண்டுமென்றும் வாரம் ஒன்றுக்குப் பத்து டாலர் கொடுக்கப்படுமென்றும் கூறினாராதலால் நான் அவ்வாறே சென்றேன். அங்குபோய்ப் பார்த்தபோது அந்த வக்கீலுக்கு ஆள்

வேண்டியதில்லை யென்றும் எனக்குக் கொடுக்கப்படும் சம்பளம் அச்சுதம்பிள்ளையே கொடுப்பதாகவும் தெரிந்தது.

இதில் என்னமோ விசேஷமிருக்கிறது. தன் பணத்தைச் செலவுசெய்து அச்சுதம்பிள்ளை யென்னை யங்கு அனுப்புவானேன் என்று சிந்தித்தேன். நான் அங்கிருப்பதில் அச்சுதம்பிள்ளைக்கு ஏதோ கெடுதி யிருக்கிறது என்று எனக்குப் புலப்பட்டது. நான் உடனே பள்ளூரை விட்டுப் புறப்பட்டு வந்துவிட்டேன். என் சிறிய தாய் அசௌக்கியமாக விருப்பதால் நான் இப்போது திரும்பிச் செல்ல முடியாதென்று அச்சுதம்பிள்ளையிடம் கூறினேன்.

அச்சுதம்பிள்ளை என்னை யொரு ஹோட்டலுக்கழைத்துச்சென்று மிக்க அன்போடு சிற்றுண்டி காபி முதலியவை வாங்கி யளித்துத் தனக்கு என்மேல் விருப்பமுண்டாய் விட்டதாகவும் என்னை யொரு பெரிய மனிதன்போல் நடந்துகொள்ளச் செய்வதாகவும் கூறி முதலில் ஒரு கிண்ணம் காபி யளித்தார். அதை யருந்திவிட்டேன். மறுபடி யொரு கிண்ணம் காபி கொடுத்தார். அதில் இவர்போட்ட சர்க்கரையால் எனக்கு சந்தேகமுண்டாயிற்று" என்றான்.

நியாயாதிபதி திடுக்கிட்டு, "என்ன சந்தேகம் ஏன்?" என்றார்.

திருவேங்கடம் கூறத்தொடங்கி,

"முதல் கிண்ணத்தில் ஹோட்டல்காரன் போட்ட சர்க்கரை தூளாக மணல்போல் ஆனால் மிருதுவாய் இருந்தது. இரண்டாவது கிண்ணத்தில் அச்சுதம்பிள்ளை போட்ட சர்க்கரை பெரிய பெரிய சதுரத்துண்டுகளாகவும் சொறசொறப்பாகவுமிருந்தது. நான் அக்காப்பியை யருந்தாமல் விட்டுவிட்டேன். பிறகு நானும் அச்சுதம்பிள்ளையும் அங்கிருந்து புறப்பட்டு வீதிக்குவந்தபோது நான் "ஆ பத்திரிகையை யங்கேயே விட்டுவிட்டேன்" என்று கூறி ஹோட்

டலுக்குள் சென்று ஹோட்டல் ஆளிடம் அக்காபி கிண்ணத்தை யப்படியே வைத்து வைக்கவேண்டு மென்றும் அது ஒரு கொலைக்குற்றத்தில் சாட்சியாக வரவேண்டும் என்றும் கூறிவிட்டு, நான் வேணுமென்றே யங்கு வைத்து விட்டுப்போன பத்திரிகையை எடுத்துக்கொண்டு சென்றேன்.

நான் பிறகு ஆனந்தலிங்கிடம் அச்சங்கதியைக் கூறினேன். இவர் அக்கிண்ணத்தை யெடுத்துச் சென்று இரசாயன சோதனை செய்யும் உத்தியோகஸ்தரிடம் கொடுத்து சோதித்தார். "அதில் என்ன இருந்தது ஆனந்தலிங்?" என்றான். ஆனந்தலிங் "அதில் சங்குப் பாஷாணம் இருந்தது" என்றான். அதைக்கேட்டதே யாவரும் திடுக்கிட்டு வெறுப்போடு அச்சுதம்பிள்ளையை நோக்கினார்கள்.

திருவேங்கடம் மிக்க வெறுப்போடும் வஞ்சத்தோடும், "ஆம். நியாயாதிபதியவர்களே! இந்த அச்சுதம்பிள்ளை யென்னைக் கொல்ல முயன்றான். அந்தச் சர்க்கரையைக்கண்டபோதே என் புத்தியில் விஷம் என்று பளிச்செனப் புலப்பட்டது. இப்படிப்பட்டவனைச் சும்மா விடலாகாது என்றெண்ணியே அதை வைத்து வைக்கும்படி ஏற்பாடு செய்தேன். அது நடந்த இரண்டொருதினங்களில் நான் பிடித்துக்கொண்டுபோய் அச்சுதம்பிள்ளை வீட்டி லடைத்துவைக்கப்பட்டேன். அது நடந்தவிதத்தைக் கூறுகிறேன். ஒரு நாள் ஆனந்தலிங் ஒரு வீதியில் வண்டியில் எனக்காகக் காத்துக்கொண் டிருப்பதாகவும் நான் உடனே வரவேண்டு மென்றும் எனக்கு டெலிபோன் சமாசாரம் வந்தது. நான் அவ்வாறே சென்றபோது, வண்டியில் ஆனந்தலிங் இல்லை. ஒரு ஜபான் சிறுவன்மட்டுமிருந்தான். அவன் ஆனந்தலிங் ஒரு வீட்டிலிருக்கிறார் என்றுகூறி யென்னை யொரு பெரிய வீட்டிற்கழைத்துப்போய் மேல்மாடியிலுள்ள ஒரு அறை

யில் விட்டுப் பூட்டிவிட்டான். அப்போது எனக்கு அது யார் வீடென்று தெரியாது. பிறகு நான் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு வெளிவந்தபின்பு அது அச்சுதம்பிள்ளையும் அவர் சகோதரியும் வசிக்கும் வீடென்றும் அவர் சகோதரி அப்போது நாட்டில் சென்றிருந்ததாகவும் தெரிந்தது.

அந்த ஜபான் சிறுவனை யது யார்வீடென்று நான் கேட்டபோது அவன் உண்மையை மறைத்து வேறொரு பெயர் கூறினன். அந்த வீட்டில் நான் அடைபட்டிருக்கையில் ஒருசமயம் காவலிருந்த கிட்டு என்ற சிறுவனை யேமாற்றிவிட்டு அந்த வீட்டிலுள்ள மற்ற அறைகளைச் சோதித்தேன். ஒரு அறையில் அச்சுதம்பிள்ளை பள்ளூரில் பிடித்ததாகக்கூறிய புகைப்படம்போன்ற ஒருபடத்தைக் கண்டேன். அப்போதுகூட நாம் அவர் வீட்டில்தான் இருக்கிறோமென்று எனக்குப் புலப்படவில்லை. அந்த வீடு அவர் நண்பர் வீடாக விருக்குமென்றே கருதினேன்.

ஆனல் நான் அதைச் சோதித்தபோது அப்படம் அச்சுதம்பிள்ளை கூறியபடி கொலைநடந்த தினத்தன்று பிடிக்கப்பட்ட படமல்லவென்று எனக்குப் புலப்பட்டது. அதன்மேல் ஓகோ அச்சுதம்பிள்ளை வேறு காலத்தில் எப்போதோ பிடிக்கப்பட்டதைக் கொலை நடந்ததினம் பிடிக்கப்பட்டதாய் நாம் நம்பும்படி செய்யவே இம்மாதிரி இப்படத்தை நம்மிடம் காட்டி நம்மை யேமாற்ற முயன்றார் என்று என்புத்திக்குப் புலப்பட்டது. இதனல் அவர் கொலை நடந்ததினம் பள்ளூரில் இருக்கவில்லை என்று தெரிந்தது. அவர் நடவாத சங்கதியை நடந்ததுபோல் நான் நம்பும்படி அப்படிச்செய்தார் என்று தெரிந்து விட்டது. ஏன். தான் செய்த கொலைக்குற்றத்தில் தான் சிக்காமல் அதை யின்னெருவன் தலைமேல் போடுவதற்காகவே.

துரையே இது பெரிய சண்டாளத்தனமான வேலை" என்றான்.

அச்சுதம்பிள்ளை பதுமைபோல் பேசாமல் அசையாதிருந்தான். ஆயினும் அவன் கைவிரல்களின் நடுக்கத்தாலும் உதட்டின் அசைவாலும் சூக்கும நோக்கமுடையோர் உண்மையை யறிந்துகொள்ளலாகும்.

நியா:—"அப்படியானால் நீ அச்சுதம்பிள்ளையின் வீட்டில் சிறை வைக்கப்பட்டிருந்தா யென்று விளங்குகிறது. எவ்வளவு காலம்?" என்றார்.

திரு:—ஏறக்குறைய ஒருவாரம்.

நியாயாதிபதி வியப்படைந்து "ஒருவாரமா? அப்புறம்?" என்றார்.

திரு:—ஆம் பிரபுவே. அப்புறம் நான் மேலிருக்கும் மூன்றாவது மாடியிலிருந்து வண்ணானுக்கு அழுக்குத் துணிகளை யிறக்கும் துவாரத்தில் குதித்து தப்பித்துக் கொண்டு வெளி வந்து விட்டேன்.

நியாயாதிபதி திப்பிரமையடைந்து "என்ன! மூன்றாவது மாடியிலிருந்தா?" என்றார்.

திருவேங்கடம் ஆம் பிரபுவே யென்று தான் அத்துவாரத்தைக்கண்டு பிடித்ததையும் படுக்கை மெத்தைகள் தலையணைகள் கம்பளிப்போர்வைகள் யாவற்றையுங் குவியலாகப் போட்டதையும் கூறி, "அவற்றின்மேல் குதித்து விட்டேன். கடவுள் தயவால் எனக்கு எவ்விதக் கெடுதியும் நேரவில்லை யாதலின் உடனே அடியிலிருந்த வழியாய் வீதிக்குச் சென்று வந்து விட்டேன். உடனே நடந்த சங்கதிகளை ஆனந்தலிங்கினிடம் வந்து கூறினேன்" என்றான்.

இச்சங்கதிகளைக் கேட்ட நியாயாதிபதி திருவேங்கடத்தை நோக்கி "நீ மிக்க அபூர்வ புத்தி சாமார்த்தியமுடைய சிறுவன்" என்றார்.

திருவேங்கடம் "இல்லை பிரபுவே. எனக்குத் துப்பறியும் இயற்கைப்புத்தியிருக்கிறது. நான் அதை யுபயோகிக்காமல் இருக்கமுடியவில்லை. நானே ஆனந்தசிங்கை வரவழைக்கும்படி முதல் முதல் அம்புஜம்மாளைத் தூண்டினேன். ஆனால் அச்சுதம்பிள்ளை யவரை யமர்த்தாமல் தடுத்து விட மிக்க முயற்சி செய்தார்" என்றான்.

நியா:—"அதைப்பற்றிய விஷய மென்ன கூறு" என்றார்.

திரு:—எனக்கு முக்கியமான இரண்டொரு உளவுகள் கிடைத்தன. அவற்றால் இது மிக்க தந்திரமும் புத்தி சாமார்த்தியமுமுடைய ஆளால் செய்யப் பட்டிருக்கிறதென்றும், ஆனந்தஸிங் தவிர வேறு சாதாரணமான எந்தத் துப்பறிபவனாலும் இதன் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாதென்றும் என்புத்தியிற் பட்டது. என் அன்பான எஜாமானைக் கொன்றவனைக் கண்டுபிடித்துத் தண்டனை யடையச் செய்வதோடு அம்புஜம்மாளுக்கு உதவி செய்யவேண்டு மென்பது என் எண்ணம். ஆகையால், எனக்குச் சினேகமான மீனாட்சியம்மாள் என்றமாது ஒருவரிருக்கிறார்கள். அந்தம்மாள் ஜோதிடமூலமாக நடக்கப்போகும் சங்கதியைக் கூறக்கூடியவர்கள். என் சிறிய தாயும் அந்தம்மாளும் நானும் ஏற்பாடு செய்து, என் சிறியதாயை அம்புஜம்மாளிடமனுப்பி மீனாட்சியம்மாளிடம் போய் இதைப்பற்றிக் கேட்கச் செய்தேன். அந்தம்மாள் ஆனந்தஸிங் ஒருவனே மரண ஆபத்தில் சிக்கியிருக்கும் ஆளைக் காப்பாற்றத் தக்கவன் என்று கூறியதன் மேல்தான் அம்புஜம்மாள் ஆனந்தஸிங்கை அழைத்தார்கள். அதை யச்சுதம்பிள்ளை கெடுத்து விடப்பார்த்தார். எப்படியெனில் அம்புஜம்மாள் ஆனந்தஸிங்கை வரும்படி கடிதம் எழுதிய சங்கதியை

யச்சுதம்பிள்ளையிடம் கூறினர்கள். அதையறிந்ததே அச்சுதம்பிள்ளை சரிதான் என்று கூறிவிட்டார். அதற்குமுன் "ஆனந்தலிங்கை வரவழைக்கவேண்டாம். வரவழைத்தால் கிருஷ்ணராவுக்கு மனஸ்தாபம் வரும். மேலும் கிருஷ்ணராவால் கண்டுபிடிக்க முடியாததை ஆனந்தலிங் கண்டுபிடிக்க முடியாது. அவன் வந்தால் இன்னும் கெடுதியையே செய்வான்" என்று தடுத்தார். கடைசியில் கடிதம் எழுதிவிட்டேன் என்று அம்புஜம்மாள் கூறிய பின்பே, "சரி அப்படியாயின் என்னைக்கூட வைத்துக்கொண்டே ஆனந்தலிங்கிடம் பேசு" என்று ஏற்பாடு செய்தார்.

மறுநாள் வந்து ஆனந்தலிங் ஊரிலில்லை. இரண்டொருவாரம் வரையில் வரமாட்டான் என்று அம்புஜத்தினிடம் கூறினர். சற்று நேரங் கழித்து நான் வந்து இச்சங்கதியைக் கேட்டதும் நடந்த சூதை யறிந்துகொண்டு "இல்லை. ஆனந்தலிங்கை நேற்று மாலை நான் நகர உத்தியான வனத்தில் பார்த்தேன்" என்று கூறி உடனே டெலிபோனில் கூப்பிடச் செய்தேன். ஆனந்தலிங் வீட்டிலேயேயிருந்து பதிலளித்தார். பிரபுக்களே! என்ன பதில் தெரியுமோ? நீ முதல் அனுப்பிய கடிதப்படி நான் வரவேண்டிய அவசியமில்லை யென்று உன் கையொப்பமிட்ட டெலிபோன் வந்தபடியால் நான் வரவில்லை" என்று பதிலளித்தார். அந்த டெலிபோன் அச்சுதம்பிள்ளை யனுப்பியதே. அதன்மேல் நான் அது யாரோ மோசம்செய்ய அனுப்பிய சமாசாரமென்றும் நீர் உடனே வரவேண்டும் என்றும் அம்புஜம்மாளைக் கூறும்படி செய்ய, அதன்மேல் தான் ஆனத்தலிங் வந்தார். நான் வேறு வழியாய் முயற்சி செய்திருந்தால் அச்சுதம்பிள்ளை ஆனந்த

லிங்கை வராதபடி எப்படியேனும் செய்து விட்டிருப்பார். ஏனெனில் ஆனந்தலிங் இதைக்கண்டுபிடிக்க அமர்த்தப் பட்டால் கட்டாயம் உண்மைக் கொலைபாதகனாகிய தன்னைக் கண்டுபிடித்து விடுவாரென்று அச்சுதம் பிள்ளைக்குத் தெரியும்'' என்றான்.

திருவேங்கடம் கூறிய யாவும் கவனமாகக்கேட்ட நியாயாதிபதி "இது மிக்க அபூர்வமான சங்கதியே" என்றார்.

---

## 25-வது அத்தியாயம்.

நியாயாதிபதி "இது மிக்க அபூர்வமான சங்கதியே" என்றதைக் கேட்ட உடன் ஆனந்தலிங் எழுந்து நின்று பின் வருமாறு கூறினான்:—

"நியாயாதிபதிகளே! இச்சிறுவன் கூறியது அதிகமாகத்தோன்றினும் ஒவ்வொரு வார்த்தையும் சத்தியமே. திருவேங்கடம் என்ற இவன் சிறுவனே யாயினும் மிக்க புத்தி சாமார்த்தியமும் நேர்த்தியுமான வேலை செய்திருக்கிறான். இவன் செய்கைகள் மிக்க புகழ்ச்சிக் குரியன. இப்போது அச்சுதம்பிள்ளையே யிக்கொலைத் தொழிலைச் செய்தவன் என்பதற்குக் கடைசியான இன்னொரு ருஜு இருக்கிறது. அதாவது இரத்னசாமிப்பிள்ளை கொல்லப் பட்ட இலக்ஷ்மணன் என்ற ஈட்டிக்கோல் இந்த அச்சுதம் பிள்ளையின் வீட்டிலிருந்து போலீஸார் செய்த சோதனையில் அகப்பட்டது என்று முன்னமே கூறினேன். அதாவது திருவேங்கடம் கொலையாளியாகிய அச்சுதம்பிள்ளையின் வீட்டில் அடைக்கப்பட் டிருந்தபோது இக்கோலையும் இன்னும் இரண்டொரு பொருள்களையும் அங்கு கண்டதாய் என்னிடம் வந்து கூறியதே நான் போலீஸாருக்குக் கூறினேன். அவர்கள் உடனே சென்று சோதித்ததில் அப்பொருள்கள்

அங்கு இருந்து அகப்பட்டன. இச்சிறுவன் கொலை நடந்த இடத்திலிருந்த ஒரு மண் மொத்தையைக்கொண்டு வந்திருக்கிறுன். அதைப்பற்றி முன்னமே யிவன் அச்சுதம் பிள்ளையிடமும் துரைத்தன வக்கீலிடமும் பகிரங்கமாகக் கூறியிருக்கிறுன். அந்த மண் மொத்தையில் இந்தக் கோலின் அடையாளம் சரியாக விருக்கிறது.

இது மட்டுமல்ல; கொலை நடந்த விடத்தில் ஒரு பாதரட்சைப் பொத்தான் அகப்பட்டது. அப்பொத்தான் அச்சுதம் பிள்ளையின் பாதரட்டையிலிருந்து விழுந்த பொத்தானே என்று பூரணமாக ருசுவாகிறது. அப்பாதரட்சை அச்சுதம் பிள்ளையின் வீட்டிலிருந்தது. அதில் ஒரு பொத்தான் குறைவாயிருக்கிறது. மீதியிருப்பவையிப் பொத்தானைப்போன்றவைகளே. இறந்தவர் என்னைக்கொன்றது இலக்ஷ்மணன் என்று கூறியது இலக்ஷ்மணன் என்ற இக்கோலையே. தன்னைக் கொன்றவன் தன் முகத்தையச்சமயம் மறைத்துக் கொண்டபடியால் கொன்ற ஆயுதத்தைக் கூறினுர். ஏனெனில் அந்த ஆயுதம் எல்லாரிடமுமிருப்பதல்ல. இதனுலாவது உளவையறிந்து ஆளைக் கண்டுபிடிப்பார்கள் என்று அப்படிக் கூறினுர்.

இக்கொலையாளி அத்தென்னுட்டு மாதைக் கட்டாயப்படுத்திப் போலீஸாருக்கு டெலிபோனில் சமாசாரத்தைக் கூறச் செய்தபோது ஒரு பத்திரிகையால் முகத்தை மூடிக்கொண்டான். இப்படி யாவும் முன் யோசனையோடு செய்தவன் "ஒரு சமயம் நாம் கொன்றுவிட்டுச் சென்றபின் சற்றுநேரம் ஸ்மரணையிருந்தால் யாரிடமாவது நம்மைக் கூறிவிடுவான்" என்ற யோசனையோடு கட்டாயம் முகத்தை யெதாலேனும் மூடிக்கொண்டே யிருப்பான். அதனுற்ருன் ஆளைக்கூறமுடியாமல் அந்த ஆயுதத்தைக் கூறினுர் என்பது தெளிவாய்ப் புலப்படுகிறது.

அச்சுதம்பிள்ளை, இரத்தினசாமிப்பிள்ளை பூச்சிகளைக் கண்டுபிடிப்பது முதலிய விவகாரங்களை யெல்லாம் பூரணமாயறிந்தவன். அவற்றைப் பிடிக்கப் போன்வைப்பதுமுதலிய யாவும் நன்றாகத் தெரியும். பெயர் முதலியவைகளும் இவனுக்குத் தெரியும். ஆகையால் அன்று பகல் இரத்தினசாமிப்பிள்ளையைக் கற்பகச்சோலைக்கு வரும்படி டெலிபோனில் கூறியது இவனே யாகும். அவரை யிவன் கொல்லவேண்டிய காரணம் என்னவெனின் அம்புஜத்தை மணம் செய்யவும் அம்மூலமாய் இரத்தினசாமிப்பிள்ளையின் ஆஸ்தியின் பெரும்பாகத்தை யடையவும் வேண்டுமென்று எண்ணியதே. அவரைக்கொன்றுவிட்டால் பிறகு தன் எண்ணத்திற்குத் தக்கபடி மரண சாசனத்தில் எழுதிக்கொள்ளலாம் என்று முன்னுடியே ஆலோசித்துக்கொண்டான்" என்றுன்.

யாவும் கேட்ட நியாயாதிபதி "ஆனந்தஸிங்! நீ மிக்க அபூர்வமான வேலைசெய்திருக்கிறுய். இச்சிறுவன் உனக்கு இதில் உதவிசெய்தான் என்று கூறுகிறுயல்லவா?" என்றுர்.

ஆனந்தஸிங்:—பிரபுவே! அப்படியல்ல. நான் அவனுக்கு உதவிசெய்தேன். குற்றம் நடந்த உடனே திருவேங்கடமே நேரில் கொலை நடந்த விடத்திற்குச் சென்று முக்கியமான உளவுகளை யெல்லாம் கண்டு பிடித்தான். ஆனல் அவன் வார்த்தையைச் சட்டை செய்கிறவர்கள் யாருமில்லை. அவன் என்ன செய்வான் பாபம். அதோடு அச்சுதம்பிள்ளை அதிக வருமானம் வருமென்று ஆசைகாட்டி அவனை நகரைவிட்டு அனுப்பிவிட்டார்.

அவன் கண்டுபிடித்த உளவுகளின் உண்மையையும் அவற்றின் மூலமாகக் குற்றவாளியையும் கண்டுபிடிக்க அனேகம் சோதனைகள் செய்யவேண்டும். அனேகம் விஷ

யங்களைக் கண்டு பிடிக்கவேண்டும். அனேக விடங்களில் மாறு வேடமணிந்து விவரங்களை யறியவேண்டும். இவை யாவும் சிறுவனால் ஆகிற காரியமல்ல வாதலின் நான் இவனுக்கு உதவிசெய்து யாவற்றையும் கண்டு பிடித்தேன். அச்சுதம்பிள்ளையே இரத்தினசாமிப் பிள்ளையைக் கொலை செய்தவன். அதோடு திருவேங்கடத்தைக் கொல்ல முயன்றான். கள்ளப்பத்திரம் எழுதினான். இந்த மூன்று குற்றங்களையும் பூரணமாக நிரூபிக்க நான் ஆயத்தமாக விருக்கிறேன். ஆதலால் இவனை யுடனே சிறைப்படுத்த வேண்டுமென்றும் இலக்ஷ்மணம் பிள்ளையை விடுதலை செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்'' என்று முடித்தான்.

சபையில் எங்கும் நிர்ச்சந்தடியாக விருந்தது. யாவரும் மிக்க வியப்போடு ஆனந்தலிங்கையும் திருவேங்கடத்தையும் நோக்கினார்கள். நியாயாதிபதி யுடனே இலக்ஷ்மணனை விடுதலை செய்துவிட்டு,

“அச்சுதம்பிள்ளை! நீ இரத்தினசாமிப் பிள்ளையைக் கொலை செய்ததற்காகவும் மற்ற குற்றங்களுக்காகவும் உடனே சிறை செய்யப்படவேண்டும் என்று கட்டளையிடுகிறோம்'' என்றார்.

உடனே அங்கிருந்த போலீஸார் அச்சுதம்பிள்ளைக்கு விலங்கிட்டு நீதிச் சபையினின்று சிறைச்சாலைக்குக் கொண்டுபோகப் புறப்பட்டார்கள். அதே சமயத்தில் அங்கு வந்திருந்த அம்புஜம், அவள் தோழி முதலியவர்களும் அங்கிருந்து புறப்பட்டார்கள்.

அம்புஜம் விசாரணையின் முடிவை யறியவேண்டுமென்றும் அதற்காகத்தான் விசாரணையின் முடிவு காலத்தில் நேரில் இருக்கவேண்டுமென்றும் தீர்மானித்தாள். அவள் தன் எண்ணத்தை ஆனந்தலிங்கிடம் கூறியபோது, அவன் “இவள் அச்சுதம் பிள்ளையின் படுமோசத்தைச்

சற்றும் அறியவில்லை. சந்தேகிக்கவுமில்லை. ஏனெனில் நடந்த விஷயங்களைக் கருதிச் சிந்திக்கும் ஆற்றல் பெண் பாலாகிய இவளுக்கில்லை-ஆகையால் நேரில் அங்கு வந்திருந்து அவன் மேலிருக்கும் ருசுக்களைப் படிப்படியா யறிந்தால் தான் இவளுக்கு உண்மை புலப்படும். அதோடு தான் மணம் புரியலாகுமென்று கருதிய மனிதன் இத்த கைய காரியத்தைச் செய்தானென்று ஏககாலத்தில் திடீ லென்று கேட்டால் மனமுடைந்து விடுவாளாதலால் நீதிச் சபையில் வந்து அந்த உண்மையை யவள் படிப்படியாய் அறிவது நலம்'' என்று கருதி,

"நீ நீதிச் சபைக்கு வருவதே நலம். ஆனல் அங்கு என்ன நடந்தாலும், ஜூரர்கள் இலக்ஷ்மணன் குற்ற வாளியே யென்று கூறிவிட்டாலும், நானும் திருவேங்கட மும் பேசும் வரையிலும், என் மொழிகளை நீதவான் கேட் டுப் பதில் கூறும் வரையிலும் நீ சற்றும் மனக்கலக்கமடைய வேண்டாம்'' என்று கூறியிருந்தான்.

அதனுற்ருன் அம்புஜம் அங்கு வந்திருந்தாள். முதலில் நடந்த விவகாரங்களனைத்தும் இலக்ஷ்மணனுக்கு விரோத மாகவே யிருந்ததையறிந்ததே அவள் சோர்வடைந்து விட் டாள். பிறகு நியாயாதிபதி ஜூரர்களுக்கு விஷயத்தின் நுட்பத்தைக் கூறி இலக்ஷ்மணனே இரத்னசாமிப் பிள்ளை யைக் கொன்றிருக்க வேண்டுமென்று ஜூரர்கள் நம்பும் படியான விதமாய் விஷயங்களை யெடுத்துக் காட்டியபோது அவள் மனமுடைந்து விட்டாள்.

ஆனந்தலிங் எவ்வளவோகூறிச் சென்றிருக்கிருன். ஆனல் நீதிச்சபையில் விவகாரம் நடந்தேறுகிறது. அது வரையில் ஆனந்தலிங்காவது திருவேங்கடமாவது அங்கு காணப்படவில்லை. நியாயாதிபதி இலக்ஷ்மணன்ருன் கொலை

செய்திருக்கவேண்டும் என்று ஜூரர்களுக்கும் மற்றவர்களுக்கும் நம்பத்தக்கவிதமாய்க் குற்றச்சாட்டின் முடிவுரையை ஜூரர்களிடம் கூறி, நீங்கள் சென்று ஆலோசித்து வந்து ஒரே அபிப்பிராயமாய்க் கூறுங்கள் என்று இயம்பி விட்டார். ஜூரர்களும் தங்களுக்குள் ஆலோசித்துவந்து கூறுவதற்காக அறைக்குள் போய்விட்டார்கள். இதுகாறும் ஆனந்தலிங்காவது திருவேங்கடமாவது அங்கு தலை காட்டவில்லை.

பெண்பாலாகிய அம்புஜம் காரியம் இவ்வளவு தூரம் மீறிவிட்டபின் இலக்ஷ்மணன் காப்பாற்றப்படுவான் என்று எப்படி நம்புவாள். அவள் பிராணவேதனையி லிருக்கிறாள். ஆச்சு, ஜூரர்களும் தங்கள் அபிப்பிராயத்தைக் கூற அறையைவிட்டுத் தங்கள் ஆசனத்தில் வந்து அமர்ந்து விட்டார்கள். அப்போது அம்புஜத்தின் மனவேதனை சொல்லமுடியாது.

அச்சமயம் அவள் துரைத்தனவக்கிலை நோக்கினாள். அவரிடம் ஒரு ஆள் வந்து நிற்பதையும், அவர் கையில் ஒரு கடிதத்தை வைத்துக்கொண்டு வாசிப்பதையும் அவர் முகத்தில் உண்டான அதிசயமான குறிகளையும் கண்டு வியப்போடு நோக்கினாள். அதற்குள் ஜூரர்கள் "குற்றவாளியே" என்று கூறிவிட்டார்கள்.

மறுவிநாடி துரைத்தனவக்கில் விவகாரம் இங்கே நிறுத்தப்பட வேண்டுமென்று கூறியதையும், அடுத்தாற்போல் நடந்த விஷயங்களையும், அதற்குள் ஆனந்தலிங்கும் திருவேங்கடமும் அங்கு வந்ததையும் கண்டதே அவள் மனதில், "ஓகோ! ஏதோ பெரிய மர்மம் வெளியாகப் போகிறது" என்று அவள் மனதிற் பட்டுவிட்டது.

பிறகு விவகாரம் போகப்போக அவள் மனதில் சொல்லொணு வியப்பும் கலவரமும் உண்டாயின. கடைசி

யில் படிப்படியாக உண்மை விளங்கிவிட்டது. அப்போது அச்சுதம்பிள்ளையின்மேல் அவளுக்குண்டாகிய வெறுப்பும் கோபமும், இத்தகைய சண்டாளனை நாம் நம்பி யிருந் தோமே யென்ற விசனமும் கூறமுடியாதவை.

அம்புஜமும் மற்றவர்களும் நீதிச்சபையை விட்டு வெளிச்செல்லும்போது போலீஸார் அச்சுதம்பிள்ளையைச் சிறைச்சாலைக்கு அழைத்துக்கொண்டு செல்கிறவர்கள் அம்புஜத்தின் ஓரமாய்ச் சென்றார்கள். அதனால் அச்சுதம் பிள்ளை யம்புஜத்தைச் சந்திக்கநேர்ந்தது. அப்போது அவன்,

"அம்புஜம்! அம்புஜம்! ஒரு வார்த்தையே" என் றதே அம்புஜம் ஒன்றும் சிந்திக்கமுடியாமல் நின்றாள். அச் சுதம்பிள்ளை "நான் இதை யேன் செய்தேனென்று நீ யறி வாய் - உன்னை யடைவதற்காக நான் எதையும் செய்வே னென்று கூறியிருக்கின்றேனல்லவா! நான் இதைச் செய்த தற்கு விசனப்படவில்லை. ஆனால் ஆனந்தவலிங் திருவேங் டம் இச்சண்டாளர்களால் என் முயற்சியில் தோல்வி யடைந்ததற்கே விசனப்படுகிறேன்" என்றான்.

அவனைப் பிடித்துச்செல்லும் போலீஸார் "ஓ கொலை பாதகனே! பேசாமல் வா. சற்று தங்கினால் ஜனங்கள் உன்னைக் கொன்றுவிடுவார்கள்" என்றுகூறி யவனை யிழுத்துச் சென்றார்கள்.

அம்புஜம் மிக்க வெறுப்போடும் கோபத்தோடும் அங் கிருந்து சென்றாள்.

விடுதலையடைந்த இலக்ஷ்மணனும் திருவேங்கடமும் அவள்கூடச் செல்கிறார்கள். அவள் மனதிலுண்டாயிருக் கும் வியாகூலத்தை யுணர்ந்த திருவேங்கடம், "அம்மா! நீ சற்றும் வியாகூலப்படவேண்டிய காரணமேயில்லை. இப் பரம சண்டாளனும், கொலை பாதகனுமாகிய அச்சுதம்

பிள்ளைக்காக நீ விசனப்படுவது பெருந்தவறு. அத்தகைய துரோகியிடம் சிக்கிக்கொள்ளாமல் கடவுள் உன்னைத் தப்ப வைத்ததற்காக நீ மிக்க சந்தோஷப்படவேண்டும். அதை விட இலக்ஷ்மணம்பிள்ளை யனியாயமான மரணத்திலிருந்து காப்பாற்றப்பட்டதற்காக நீ அதிகமாய் சந்தோஷமடைய வேண்டும். ஒன்றுக்கும் கலக்கம்வேண்டாம்'' என்றான்.

திருவேங்கடம் கூறியதையும் மற்ற சங்கதிகளையும் யாவும் கேட்டுக்கொண்டிருந்த இலக்ஷ்மணன், "ஆம் என் அன்பே! சந்தோஷமாயிரு. கடைசியில் நான் பரிசுத்த மான உள்ளத்தோடு உன்னை நேசிக்கிறேன். சிற்றப்பாவின் மரணசாசனத்தில் இருந்த உன் கலியாணத்தைப்பற்றிய நிபந்தனை அவர் எழுதியதல்ல வென்று மட்டும் எனக்குத் தெரிந்திருந்தால், ஆகா, விவகாரங்கள் இந்தவிதமாக நடந் திரா. அந்த நிபந்தனை சிற்றப்பாவே யெழுதியதாக நான் நம்பியதால், நான் உன்னை மணம்புரியும்படி கேட்டால் நீ ஆஸ்தியை யிழந்துவிட நேரிடும். அதனால் உனக்கு மன வருத்தமுண்டாகுமென்று நான் எண்ணினேன்'' என்றான்.

யாவரும் வண்டியிலேறிச் செல்லும்போது அம்புஜம் இலக்ஷ்மணனை நோக்கி, "நீயேன் அப்போதே உன் நிரப ராதத்தன்மையை யுண்மைப்படி யென்னிடம் கூறிவிட் டிருக்கலாகாது'' என்று கேட்டாள்.

இலக்ஷ்:—"என்னால் கூறமுடியவில்லை. அது முட்டாள் தனமே. ஆனால் நீ கொஞ்சமேனும் என்மேல் சந்தே கங்கொண்டது எனக்கு மிக்க மனவருத்தத்தையும் விரக்தியையும் யுண்டாக்கிவிட்டது. ஏன்? நான் ஒருபோதும் சிற்றப்பாவைக் கொல்லமாட்டே னென்று உனக்குத்தெரியாதா?'' என்றான்.

அம்பு:—இதோ இந்த நாட்களெல்லாம் என்மனம் பைத்தி யம் கொண்டதுபோலிருக்கிறது. சத்தியமாய் எதை

நம்புவது எதை நம்பலாகாது என்று தெரியவில்லை. என் புத்தியே பெருங் கலவரத்திலிருந்தது; அந்தோ என் செய்வேன்" என்றாள்.

இலக்ஷ்:—"நீ இன்னும் இங்கிருந்தால்கூட உன்மனம் நிம் மதி யடையாது. ஆகையால் நான் உடனே யுன்னை மணம் புரிந்துகொண்டு வெளிநாட்டிற்கு அழைத்துக் கொண்டு செல்கிறேன். இன்றேல் இந்தச் சண்டாள னாகிய அச்சுதம்பிள்ளையின் துரோகச் செயல்கள் விசாரணையில் வெளிவருவதைக் கேட்கக்கேட்க உனக்கு மிக்க வியாகூலம் உண்டாகும்" என்றான்.

அம்பு:—"ஆம். இச்சமயம் கொஞ்சகாலம் வெளிநாட்டில் சென்றிருக்கவே யெனக்குப்பிரியம். ஆனால் உடனே மணம் செய்துகொள்ள என்மனம் உடன்படாது. நான் கூறும்போது மணம் செய்துகொள்ளலாம். இப்போது உடனே புறப்பட்டு எங்கேனும் யாத்திரை செல்லலாம். எல்லம்மாளை என் தோழியாக அழைத் துப் போகலாம்" என்றாள்.

இந்த ஏற்பாடு இலக்ஷ்மணனுக்குத் தன் ஏற்பாட் டைப்போல் அவ்வளவு நன்றாக இல்லை. ஆனால் அம்புஜத் தின்மேல் வைத்திருந்த காதலால் ஒப்புக்கொண்டான். திருவேங்கடம் அம்புஜத்தாலும் இலக்ஷ்மணனாலும் அதிக மாகப் புகழப்பட்டான். இலக்ஷ்மணன் அநியாயமரணத்தி னின்று தப்பியதும், மெய்யான குற்றவாளி கண்டுபிடிக்கப் பட்டதும் திருவேங்கடத்தாலேயே யென்று அவர்கள் நன்று யறிந்துகொண்டார்கள். திருவேங்கடம் இனி தாழ்ந்தவேலைக்குச் செல்லவேண்டாமென்றும் அவனைக் கௌரவமான பதவியில் இருக்கச்செய்வது தங்கள் கடமை யென்றும் கூறினார்கள்.

திருவேங்கடம் "உங்கள் அன்பிற்காக மிக்க நன்றியறி

வுள்ளவனுயிருக்கிறேன். எனக்குப் புகழ்ச்சியைப்பற்றி யக்கரையில்லை. இலக்ஷ்மணம்பிள்ளையைக் காப்பாற்றியதும், அந்தக் கள்ளப்பயலாகிய அச்சுதம்பிள்ளையைக் கண்டு பிடித்ததுமே எனக்குத்திருப்தி. இவற்றைக் கண்டுபிடிக்கச் சக்தி வந்ததே எனக்குச் சந்தோஷம். நான் ஆனந்த லிங்கைப்போல் ஒருபெரிய துப்பறிபவனுகப் போகிறேன். ஆனந்தலிங் அச்சுதம்பிள்ளையை யெப்படிப் பிடித்துவிட்டான் பார்த்தீர்களா? அதுவும் அவன் தப்பிக்கொண்டு ஒடிவிடாதபடி. அதற்குத்தான் அக்கடைசி வேளைவரையில் மூச்சுவிடாமலிருந்து நீதிச்சபையிலேயே பிடித்துவிட்டான். அதுதான் இருக்கிற சாமார்த்தியம். ஆனல் அச்சுதம் பிள்ளை எஜமானுக்கனுப்பிய டெலிபோனில் அவரைச் சிற்றப்பாவென்று எப்படிக்கூப்பிட்டான் என்பது விளங்கவில்லை" என்ருன்.

இலக்ஷ்மணன் "அச்சமயம் நான் இங்கு வந்திருப்பது அவனுக்குத் தெரியாதென்றே நம்புகிறேன். அதனுல் எனக்கும் அவன் ஏன் அப்படிக்கூப்பிட்டான் என்பது விளங்கவில்லை" என்ருன்.

அம்புஜம், "அப்படியானுல் நான் அதை விளங்க வைக்கக்கூடும். எப்படி யெனில், அந்த டெலிபோன் சமாசாரத்தை யனுப்பியவன் அச்சுதம்பிள்ளையே. அவன் தான் என்னை மணம்புரிவது கட்டாயம் நிச்சயம் என்று தனக்குள் கொண்டிருந்த தீர்மானத்தால் அடிக்கடி சிற்றப்பாவென்று கூப்பிட்டுக்கொண்டிருந்தான்" என்ருள்.

இலக்ஷ்மணன், "அப்படியாயின் சிற்றப்பா நீ யவனை மணம்புரிய வேண்டுமென்று மெய்யாகவே விரும்பினுரோ?" என்று வியப்போடு வினவினுன்.

அம்புஜம்:—"அப்படியல்ல; எனக்கு வேறு யார் மேலும் விருப்பமில்லாதிருக்கிற வரையில் இவன் நல்ல அந்

தஸ்திலிருக்கிருனே இவனை மணம் புரிந்து கொள்ளட்டும் என்பதே அவர் எண்ணம்" என்ருள்.

இலக்ஷ்மணன் இப்போதுனக்கு ஒருவர்மேல் விருப்பமிருக்கிறது என்ருன். இவர்கள் வீடுபோய்ச் சேர்ந்ததும் திருவேங்கடம் "நான் இனி ஆனந்தவிங்கிடமே வேலை செய்யப்போகிறேன்; ஆனந்தவிங் என்னைத் தமக்கு உதவியாளாய் வைத்துக்கொள்வதாய் வாக்களித்து விட்டார். சீக்கிரம் வரும்படி கூறினர். அச்சுதம்பிள்ளையை விசாரணையில் குற்றவாளியே யென்று நிரூபித்துத் தண்டனையடையச் செய்யவேண்டிய வேலை யின்னும் பாக்கியிருக்கிறது. நான் போய் வருகிறேன்" என்று கூறிவிட்டுச் சென்ருன்.

அம்புஜம், இலக்ஷ்மணன், எல்லம்மாள் மூவரும் பாஞ்சால நாட்டிற்குச் சென்று சில தினங்களிருந்து வருவதென்ற தீர்மானத்தின்மேல் மறுநாளே புறப்படுவதற்காக அன்றே ஆயத்தம் செய்யத்தொடங்கினர்கள். அச்சுதம் பிள்ளையைப் பற்றிய விசாரணை நடந்து யாவும் முடிவாகிறவரையில் வெளி நாட்டிலிருந்து வரவேண்டு மென்பது அவர்கள் எண்ணம்.

---

## 26-வது அத்தியாயம்.

ஆனந்தவிங் உண்மையான குற்றவாளியைக் கண்டுபிடிக்காதிருந்தால் வேறு யாரும் கண்டுபிடித்திருக்கமாட்டார்களென்பது வெளிப்படையான விஷயமே. ஆனந்தவிங் அத்தொழிலாளி யானபடியால் கொலை நடந்த சங்கதியைக் கேட்டது முதல் அதைப்பற்றிய விவகாரங்களை யெல்லாம் கிரமமாகக் கவனித்தே வந்தான். மரண விசாரணை நடந்த விவகாரத்தைப் பத்திரிகையில் பார்த்தபோதே திருவேங்கடம் என்ற சிறுவன் கொடுத்த

சாட்சியத்தால் அவன் மிக்க புத்தி சாதுரியமுடைய வனென்றும் துப்பறியும் நுட்பபுத்தி யுடையவனென்றும் அறிந்து கொண்டதோடு அவன் ஏதோ முக்கியமான உள வுகளை யறிந்து கொண்டிருக்கிறான் என்று தெரிந்து கொண் டான். அக்கொலை கண்டுபிடிக்க முடியாத விதமான நிலை மையிலிருக்கிற தென்றும், அது மிக்க ஆச்சரியமான மர்ம மாக விருக்கிறதென்றும், அதைச் செய்தவன் மிக்க புத்தி சாதுரிய முடையவனென்றும் அவன் புத்திக்கு அப் போதே புலப்பட்டு விட்டது. இத்தகைய அபூர்வமான மர்மக்கொலையின் உண்மையைக் கண்டுபிடிக்க வேண்டு மென்பதில் அவன் மிக்க ஆவலுடையவனே. ஆயினும் ஒருவரும் தன்னை யதைக்கண்டுபிடிக்கும்படி கூப்பிடவில்லை. ஆகையால் பேசாமலிருந்து தன் மற்ற காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

ஆனந்தலிங்குக்குத் திடீலென்று ஒருநாள் அம்புஜத் தினிடமிருந்து ஒரு கடிதம் வந்தது. அதில்,

"என் சிறிய தந்தையாகிய இரத்னசாமிப்பிள்ளை கொலை செய்யப்பட்ட சங்கதியைத் தாங்கள் அறிந்திருக்கலாகும். இதுகாறும் அதைப்பற்றிய உண்மை வெளியாகவில்லை. அதைப்பற்றி இப்போது நடந்திருக்கும் விவகாரம் உண் மையல்ல வென்று எனக்குப் படுகிறது. ஆகையால் இதைத் தாங்கள் தயவுசெய்து கண்டுபிடிக்கக் கோருகி றேன். இதற்காக எவ்வளவு செலவாவதாயினும் நான் அதைச்செய்யச் சித்தமாக விருக்கிறேன். தங்களைவிட வேறு ஒருவராலும் இதைக் கண்டுபிடிக்க முடியாதென்று அறிகிறேன். ஆகையால் தயவுசெய்து உடனே வரும்படி வேண்டுகிறேன்" என்று எழுதியிருந்தாள்.

இக்கடிதத்தைக் கண்டதே ஆனந்தஸிங் "ஆ! இப்பெண் இறந்தவன்மேல் உண்மையான அன்புடையவள். இக்கொலை தலைகால் தெரியாத பெரிய மாயமாயிருக்கிறது. ஆனால் அத்திருவேங்கடம் என்ற சிறுவன் மிக்க புத்திசாலி, அவன் இதில் சம்பந்தப்பட்ட முக்கியமான உளவுகள் எவற்றையோ கண்டுபிடித்திருக்கிறான். ஆனால் அவன் பேச்சை யொருவரும் இலட்சியம் செய்யவில்லை. இருக்கட்டும். நாளைக்குப் போய்ப் பார்ப்போம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். ஆனால் மறுநாட் காலை அதே அம்புஜம்மாள் அனுப்பியதாக ஒரு டெலிபோன் வந்தது.

ஆனந்தஸிங் ஆவலோடு அதைப் பிறித்துப் பார்த்த போது அதில் "நான் தங்களுக்கு எழுதிய கடிதத்தை வாபீஸ் வங்கிக்கொள்கிறேன். ஆகையால் தாங்கள் வர வேண்டாம். வீண் சிரமத்திற்கு மன்னிக்கக் கோருகிறேன். இப்படிக்கு அம்புஜம்மாள்" என்றிருந்தது.

இதைக்கண்ட ஆனந்தஸிங் அச்சமாசாரம் அம்புஜமே தான் அனுப்பினாள் என்றே நம்பினான். "ஆனால் இதில் ஏதோ சூதிருக்கிறது. யாரோ உண்மையைக் கண்டுபிடிக்கலாகாது என்று கருதுகிறவர்கள் இப்பெண்ணை மயக்கி நம்மைக் கூப்பிடவேண்டாம் என்று போதித்து விட்டார்கள்" என்று கருதினான்.

ஆயினும் வேண்டாமென்றபின் அவன் என்ன செய்வான். ஆனால் அதனாலேயே இதில் உள்ளுக்குள்ளாகவே இதைக் கண்டறியலாகாதென்ற ஆட்கள் யாரோ இருக்கிறார்கள் என்று தெரிந்து கொண்டான். பிறகு மறுநாள் திருவேங்கடம் கூறியபடி அம்புஜம் டெலிபோனில் கூப்பிட்டபோது அம்புஜம் தானா என்று நிச்சயம் அறியும்

பொருட்டே அவளை கூப்பிடட்டும் என்றான். அவளை அவசியம் வாரும் என்றபோது "ஓகோ, நம்மை யழைக்க வேண்டாமென்று யாரோ இக்கன்னிகையைத் தடுத்திருக்கிறார்கள். இவள் மீறி நம்மை வரும்படி கடிதம் எழுதினாள். இவளைத் தடுத்த ஆள் நமக்கு இவளனுப்பியதாக அந்த டெலிபோன் சமாசாரத்தை யனுப்பி யிருக்கிறான். ஆகையால் இவளுக்கு மிக்க பழக்கமாக விருக்கிற ஒரு ஆளே இதன் மூலகாரணமாக விருக்கவேண்டும்'' என்று தனக்குள் சிந்தித்துக் கொண்டான்.

பிறகு ஆனந்தலிங் நேரில் வந்து அம்புஜம் திருவேங்கடம் இருவரிடமும் இதைப்பற்றி விசாரித்தபோது, இரண்டொரு சமாசாரங்களால் இதன் மூலம் இங்கேயே யிருக்கிறதென்று தெரிந்து கொண்டான். அதன் பிறகு திருவேங்கடத்தினிடம் தனியாகப் பேசியபோது அவன் பாதரட்சைப் பொத்தான் மண் குறி இரண்டையும் காட்டியதோடு அச்சுதம்பிள்ளை தன்னைப் பள்ளூருக் கனுப்பியதையும், தன் சம்பளத்தை அச்சுதம்பிள்ளையே அனுப்புவதாக ஏற்பாடு செய்ததையும் கூறியதைக் கேட்டதோடு அச்சுதம்பிள்ளை திருவேங்கடத்திற்குக் கொடுத்த காபியில் பாஷாணம் இருந்ததைக் கண்டுபிடித்துக்கொண்டான். இவற்றால் அச்சுதம்பிள்ளைமேல் அவனுக்கு மிக்க சந்தேகம் உண்டாயிற்று. அதன்மேல் இரத்னசாமிப்பிள்ளையின் மரண சாசனத்தைப் பார்க்கவேண்டு மென்று கருதினான். ஏனெனில் அவர் அம்புஜத்தைத் தன் புத்திரிபோல் கவனித்து வந்தார். அப்படிப்பட்டவர் அவள் அச்சுதம்பிள்ளையையே மணம் புரியவேண்டுமென்றும் அப்படிச் செய்யாவிட்டால் அவளுக்குஐம்பதாயிரம் டாலர் மட்டுமே கொடுக்கப்படுமென்றும் எழுதி யிருப்பார் என்பது அவன் மனதிற்கு ஒப்பவில்லை—ஆகையால் அச்சாசனத்தில் ஏதோ

துரோகம் நடந்திருக்க வேண்டுமென்று புலப்பட்டது. அதேப்படி யதைப் பூதக்கண்ணடியில் சோதித்துப் பார்த்தான். அப்போது அதில் மேல்கண்ட நிபந்தனை அப்பத்திரத்தில் பின்னல் கள்ளத்தனமாய்ச் சேர்க்கப்பட்டதென்று கண்டான். அப்போது தான் அச்சுதம்பிள்ளையே இரத்தினசாமிப் பிள்ளையைக் கொன்றவன் என்று நிச்சயமாக வுணர்ந்தான்.

அதன்மேல் ஆனந்தவிங் ருஜுக்களைச் சேகரம் செய்யத்தொடங்கினன். யாவும் சேகரம் செய்தபின் இதைப் பற்றி யிடையில் கொஞ்சம் பிரஸ்தாபம் வெளிவந்தால் அச்சுதம்பிள்ளை எப்படியாவது தப்பித்துக்கொண்டு போய் விடுவான். ஆகையால் விசாரணையின் கடைசி நாள் வரையில் எதிர்பார்த்திருந்தான். பொத்தானிருந்த பாதரட்சையும் கொலைசெய்த ஆயுதமும் இன்னும் அகப்படவில்லை. நற்காலமாகத் திருவேங்கடம் அவை யிரண்டும் இருக்குமிடத்தைக் கண்டறிந்து வந்து கூறிவிட்டான்.

அதுவும் குற்றவாளியாகிய அச்சுதம் பிள்ளையே அதற்கு உதவி செய்தான். எப்படியெனில் அவனே தன் ஆளிடம் கூறி அவனைச் சூதாக அழைத்துக்கொண்டு போய் தன் வீட்டிலேயே யொரு அறையில் அடைத்து வைக்கும்படி ஏற்பாடு செய்தான். "திருவேங்கடம் தன் குற்றத்தை யெப்படியோ அறிந்துகொண்டிருக்கிறன், அல்லது சந்தேகித்திருக்கிறன்" என்று அச்சுதம்பிள்ளை தெரிந்து கொண்டான். அதோடு அவன் தன் பாதரட்சைப் பொத்தானையும், தன் கைக்கோல் குறியிருக்கும் மண்மொத்தையையும் கண்டுபிடித்து வைத்துக்கொண்டிருக்கிறன் என்று அச்சுதம் பிள்ளைக்குத் தெரியும். ஆனல் திருவேங்கடம் அவற்றின் உண்மையை யறியவில்லையென்றும் பொத்தானைச் சட்டைப் பொத்தானென்றும்

மண்குறியைக் கால்குறி யென்றும் கருதி யிருக்கிறு னென்றே அச்சுதம்பிள்ளை யெண்ணிக்கொண் டிருக்கிறுன். அப்படி யிருக்க அவனுக்குப் பீதியேனெனில், ஆனந்த லிங்கே இந்தக் கொலையைப்பற்றிய உண்மையைக் கண்டு பிடிக்கக்கூடியவன் என்று திருவேங்கடம் புகன்றதையும், அம்புஜம் ஆனந்தலிங்கை வரும்படி கடிதம் எழுதியதை யும் அவன் அறிவான். ஆனந்தலிங் ஊரில் இருப்பது அவ னுக்குத் தெரியும். 'நான் உனக்கெழுதிய கடிதத்தை இரத்து செய்துவிட்டேன், நீ வரவேண்டாம்' என்று தான் ஆனந்தலிங்குக்கு டெலிபோன் சமாசாரம் அனுப்பி, அவன் ஊரிலில்லை யென்று அம்புஜத்திற்குக் கூறியிருப்பி னும், எந்த சந்தர்ப்பத்தாலாவது ஆனந்தலிங் திருவேங் கடத்தைச் சந்தித்தால் அச்சிறுவன் தன்னிடமிருக்கும் உள வுகளை யவனுக்குக் காட்டிவிடுவான்; ஆனந்தலிங் உண்மை யைக் கண்டுபிடித்து விடுவான் என்பது அச்சுதம்பிள்ளை யின் கருத்து. அதனுல் இந்த விவகாரம் முடிவாகி இலக்ஷ்ம ணன் தண்டிக்கப்படும் வரையில் திருவேங்கடத்தைப் பிடித்து வைத்திருந்தால் பிறகு பயமில்லையென்று கருதியே அச்சிறுவனைப் பிடித்தடைத்துவைக்க ஏற்பாடு செய்தான். கடவுள் அவ்வழியாகவே அவன் குற்றத்திற்கு ருசு வெளி வரும்படிச் செய்துவிட்டார்.

அக்கிரமம் செய்யும் துஷ்டர்களுக்கு எங்குமிருந்து எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டிருக்கும் ஒருவன் என்றுமுளன் என்ற அறிவிருப்பதில்லை. அவன் இவர்கள் செய்கையாலேயே யிவர்களைக் காட்டிக்கொடுத்து விடுகி றுன். இந்த அச்சுதம்பிள்ளை போன்றவர்கள் எவ்வளவு புத்தி சாமார்த்தியம், தந்திரம், முன் யோசனை முதலிய வற்ருேடு தங்கள் துர்க்காரியங்களைச் செய்பினும் கடைசி யில் தாங்கள் செய்யும் காரியத்தாலேயே தாங்கள் அகப்

பட்டுக் கொள்ளத்தக்க உளவுகளை விட்டுச் செல்கிறார்கள். பின்னால் குற்றத்தைக் கண்டு பிடிப்போர் மட்டும் ஜாக்கிரதையாகக் கவனித்தால் ஏதேனும் உளவுக்கு அற்ப சங்கதியாவது அகப்படாமற் போகாது. அச்சுதம்பிள்ளையும் எவ்வளவோ சாமார்த்தியமாக இக்கொலையைச் செய்திருந்தாலும் உளவுக்குத் தன் பாதரட்சைப் பொத்தானையும் கைக்கோல் குறியையும் விட்டே சென்றான். அதோடு தான் ஜாக்கிரதை யெடுத்துக்கொண்டதில் அளவு மீறிப் போய் அக்கள்ளத் தந்தி சமாசாரத்தை யுற்பத்தி செய்து கொண்டதோடு, பத்திரிகையையும் வாங்கினான். அவை போதாவென்று எப்போதோ பிடித்த புகைப்படத்தையும் பள்ளூரில் கொலை நடந்ததினம் பிடித்ததாகக் கூறினான்.

கடைசியில் ஆனந்தலிங் கொலை நடந்த விடத்தில் அகப்பட்ட பென்ஸிலும் அச்சுதம்பிள்ளை யுடையதே யென்பதை யவன் வேலைக்காரன் மூலமாகவே யறிந்து கொண்டான். அச்சுதம்பிள்ளை தப்பித்துக்கொண்டு போக இடங்கொடாமல் செய்ய வேண்டுமென்று கருதினால்-விசாரணையின் முடிவு நாள், அவன் குற்றவாளியாகிய இலக்ஷ்மணன் பட்சத்திலிருக்கும் வக்கீலாகையால் கட்டாயம் முடிவு வரையில் நீதிச்சபையிலேயே யிருக்கவேண்டும். அச்சமயம் அங்கேயேதான் அவனைப் பிடிக்கவேண்டும் என்று தீர்மானித்தான். உண்மைச் சங்கதியை அம்புஜத்தினிடம் கூடக் கூறவில்லை.

விசாரணை முடிவுதினம் ஆனந்தலிங் அதிகாரிகளிடம் சென்று தக்ககாரணம்கூறி அச்சுதம் பிள்ளையின் வீட்டைச் சோதனைசெய்ய அதிகாரம் பெற்று, அச்சுதம் பிள்ளை நீதிச் சபையில் இருக்கையில் அதிகாரிகளோடு சென்று வீட்டைச் சோதித்து பாதரட்சையையும் கொலை

செய்த இலக்ஷ்மணன் என்ற ஈட்டியையுடைய கோலையும் கண்டெடுத்துக்கொண்டு வந்தான்.

* * * *

பிரதம நீதிச்சபையில் விசாரணை நடக்கும் தினம் என்றும் அங்கு கூடியிராத அவ்வளவு ஜனக்கூட்டம் காலையிலேயே கூடிவிட்டது. அச்சுதம்பிள்ளை இதுகாறும் மிக்க யோக்கியனென்று யாவராலும் கருதப்பட்ட ஒரு பிரசித்திபெற்ற வக்கீல் - ஒரு காலத்தில் நியாயாதிபதியாகவே வேலைபார்த்தவன்-அப்படிப்பட்டவன் இக்கொலையைச் செய்திருக்கிறான் என்ற வதந்தி பரவியதால் அனேகர் அதன் முடிவையறிய வந்து நீதிச் சபையிருக்கும் வீதியில் நிறைந்து விட்டார்கள்.

விசாரணை யாரம்பமாயிற்று. முதலாவதாகப் போலீஸார் விசாரிக்கப்பட்டார்கள். அவர்கள் கொலையைப்பற்றிய சங்கதி தங்களுக்கு எவ்வாறு வந்த தென்பதைப்பற்றி கூறினார்கள். பிறகு மரண விசாரணை செய்த அதிகாரியும், சவத்தைச் சோதித்த வைத்தியரும் சாக்ஷி கூறினார்கள். அதன்பிறகு துரைத்தன வக்கீல் எழுந்து முதலில் உண்டான சந்தேகங்களைப்பற்றியும் இலக்ஷ்மணன் குற்றம் சாட்டப்பட்டு தண்டனை யடையப்போகும் சமயத்தில் ஆனந்தஸிங் வந்து நிரூபித்த அத்தாட்சிகளையும் அதனால் இலக்ஷ்மணன் விடுதலை செய்யப்பட்டு அச்சுதம்பிள்ளையாகிய உண்மைக் குற்றவாளி சிறை செய்யப்பட்டிருக்கிறானென்றும், குற்றத்தை ருசுப்படுத்தத் திருவேங்கடம் என்பவனை முதலாவது சாட்சியாக விசாரிக்க வேண்டுமென்றும் கூறினர். அதன்படி திருவேங்கடம் முதலாவது சாட்சியாக விசாரிக்கப்பட்டான்.

திருவேங்கடம் சாட்சிக் கூண்டில் நின்றதே யாவரும் அவனை வியப்போடு நோக்கினார்கள். ஏனெனில் இச்சிறு

வன் இத்தகைய கொலைக்குற்றத்தில் என்ன உளவுகளைக் கண்டுபிடித்து விட்டிருப்பான் என்பது யாவர்க்கும் பெரும் வியப்பாகவே யிருந்தது. அவன் சாட்சிக்கூண்டில் நின்றதும் பின் வருமாறு கூறத்தொடங்கினன்.

"நியாயாதிபதிகளே! எனக்கு நாணயமாகவும் ஒழுங்காகவும் பேசத் தெரியாது. நான் என் எஜமான்மேல் மிக்க அன்பு வைத்திருந்தேன். எனக்கு இயற்கையாகவே துப்பறிவதில் மிக்க விருப்பமுண்டு. நாம் ஒரு துப்பறிபவனுக வேண்டுமென்பதே என் எண்ணம். கட்டாயம் அப்படியே ஆவேன்-என் எஜமான் கொலை செய்யப்பட்டார் என்பதை யறிந்தபின் கொலையாளியை யெப்படியாவது கண்டுபிடிக்க நாம் முயற்சி செய்யவேண்டுமென்று எனக்குள் தீர்மானித்துக் கொண்டேன்.

அதன்மேல் மரண விசாரணை நடந்த மறுநாள் நான் கொலை நடந்த விடத்திற்குச் சென்றேன். அங்கு ஒரு பொத்தானையும் மண்ணில் ஒரு முக்கியமான குறியையும் கண்டேன். பொத்தான் பாதரட்சையில் இருந்து விழுந்த பொத்தான் என்றும், அதன் பின்பக்கம் ஒருவிதமான நிறம் ஏறியிருந்ததால் அப்பாதரட்சையைக் கண்டால் அறிந்து கொள்ளலாமென்றும் என் புத்திக்குப் புலப்பட்டது. இதுமட்டுமல்ல. அம்மண்ணில் இருந்த குறி இலக்ஷ்மணன் என்ற கோலின் குறியென்று புலப்பட்டது. இரகசியமாக ஈட்டி வைத்திருக்கும் அத்தகைய கோலை நான் பார்த்திருக்கிறேன். உடனே என் எஜமானர் "என்னைக் கொன்றது இலக்ஷ்மணன்" என்று இறக்கும்போது கூறியது என் நினைவிற்கு வந்தது.

இந்த இரண்டு விஷயங்களையும் நான் என் வரையில் இரகசியமாய் வைத்துக்கொண்டேன். ஏனெனில் இவற்றைக்கொண்டு உண்மைக் கொலையாளியைக் கண்டுபிடிக்க

லாகும் என்று எனக்குப் புலப்பட்டது. ஆனால் சிறுவனாகிய என் பேச்சை யெல்லாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகையால் நான் அவசரப்பட்டு அவற்றை வெளியிட்டு விட்டால் கடைசியில் குற்றவாளி தப்பித்துக் கொள்ள எச்சரிக்கை செய்து விட்டதாக முடியும் என்று கருதி தக்க ஆசாமியிடந்தான் கூறவேண்டுமென்று கருதினேன்.

நான் முதலில் அச்சுதம்பிள்ளை என் எஜமானுடைய உண்மைச் சினேகர் என்றும் அவரிடம் தான் இதைக் கூற வேண்டுமென்றும் கருதினேன். நான் அவரிடம் சென்று பொத்தானைப்பற்றி கூறியதே அவர் முகத்தில் ஒருவித விகாரமும் கலவரமும் உண்டாயின. அவர் மிக்க ஆவலோடு அது என்ன பொத்தான் என்றார். அதன்மேல் நான் ஓகோ இவரிடம் உண்மை கூறலாகாதென்று என் மனதிற்பட்டது. அதன்மேல் அவரிடம் பொத்தான் சட்டைகளுக்கு அழகுக்கு வைக்கும் பொத்தான் என்றும் மண்ணில் குதிக்காலின் அடையாளம் இருந்ததென்றும் கூறினேன். அவற்றைக் கேட்டதே அவர் மனதிலிருந்த பெரும் பாரம் நீங்கியதுபோல் அவர் முகத்தால் விளங்கியது-அப்போதே எனக்கு அவர்மேல் சந்தேகம் தோன்றியது. பிறகு அவர் என்னைப் பள்ளூருக்குப் போகும்படி செய்தார். அங்கு சென்று, அங்கே உண்மையாக எனக்கு வேலையில்லை யென்பதையும் அச்சுதம்பிள்ளையே என் சம்பளத்தைக் கொடுப்பதாகத் தன் நண்பரிடம் ஏற்பாடு செய்திருக்கிறார் என்பதையு மறிந்ததே, ஓகோ இக்கொலையின் உண்மை நமது ருசுவால் வெளியாய் விடுமென்று இவர் அஞ்சுகிறார் என்று தெரிந்துகொண்டேன்.

இதற்கு முன்பே பொத்தானைப்பற்றி நான் இலக்ஷ்மணம் பிள்ளையின் பாதரட்சைகளை யெல்லாம் சோதித்துப்

பார்த்ததில் அப்பொத்தான் இலக்ஷ்மணம் பிள்ளையின் பாதரட்சையிலிருந்து விழுந்ததல்லவென்று எனக்குத் தெரிந்துவிட்டது-நான் உடனே திரும்பி இந்நகருக்கு வந்து விட்டேன். அச்சுதம்பிள்ளைக்கு என் சிறிய தாய் அசௌக்கியமாக விருப்பதால் இப்போது போக முடியாதென்று பொய்க் காரணம் கூறிவிட்டேன். பிறகு இங்கிருக்கும் விஷயங்களைக் கவனித்தபோது, துப்பறியும் கிருஷ்ணராவ் சுந்தரத்தின்மேல் குற்றத்தைச் சுமத்த முயல்கிறாரென்றும், அச்சுதம்பிள்ளை இலக்ஷ்மணம் பிள்ளையே கொலையாளி யென்று அம்புஜம்மாள் நம்பும்படிச் செய்து தான் அவரைக் காப்பாற்றுவதாய் வாக்களித் திருக்கிறாரென்றும், பினகபாணி என்பவன் அம்புஜம்மாள் எதைக் கூறினாலும் அதற்குத் தாளம் போடுகிறானென்றும் கடைசியில் இவர்கள் உண்மைக் குற்றவாளியைக் கண்டு பிடிக்கமாட்டார்களென்றும் எனக்குப் புலப்பட்டது. அதோடு மரண சாசனத்திலுள்ள நிபந்தனைகளையும் அச்சுதம்பிள்ளையின் நடக்கையையும் கருதியபோது அச்சுதம்பிள்ளையின் மேல் எனக்கு மிக்க சந்தேக முண்டாகியது.

துப்பறியும் நிபுணராகிய ஆனந்தவலிங்கைப்பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகையால் அவர் ஒருவரே இதைக் கண்டுபிடிக்கக் கூடியவர் என்று தெரிந்துகொண்டு நான் கீழ் நீதிச்சபையில் கூறியபடி என் சிறிய தாயாரை யனுப்பித் தந்திரமாக அம்புஜம்மாள் ஆனந்தவலிங்கை யிவ் விஷயத்தில் அமர்த்தும்படி செய்தேன்-அந்தம்மாள் அவ்வாறே ஆனந்தவலிங்கை வரும்படி யவருக்குக் கடிதம் எழுதினார்கள். ஆனால் அந்தம்மாள் அச்சுதம் பிள்ளையிடம் தான் ஆனந்தவலிங்கை யமர்த்தக் கருதுவதாகக் கூறிய போது அவர் தன்னாலான வரையில் தடுத்தார். கடைசி

யில் அம்புஜம்மாள் நான் ஆனந்தலிங்கை வரும்படி முன்னமே கடிதம் எழுதிவிட்டேன் என்று கூறியபோது, "அப்படியாயின், அவனோடு பேசும்போது என்னைக் கூட வைத்துக்கொண்டு பேசு" என்று மிக்க கண்டிப்பாய்த் திட்டம் செய்தார்.

ஆனால் அவர் உடனே "நான் எழுதிய கடிதத்தை வாபீஸ் வாங்கிக்கொள்கிறேன். நீ என்னைக் காண வர வேண்டாம்" என்று அம்புஜம் கூறியதுபோல் ஆனந்தலிங்குக்கு டெலிபோன் சங்கதி யனுப்பிவிட்டு, அம்புஜம்மாளிடம் "ஆனந்தலிங் ஊரிலில்லை. இன்னும் இரண்டொரு வாரம் இங்கு வரமாட்டான்" என்று கூறிவிட்டார். இவருடைய எண்ணம் ஆனந்தலிங் வந்தால் உண்மையைக் கண்டுபிடித்து விடுவான் என்ற பீதியே.

இச்சூதையறிந்து நான் ஆனந்தலிங்கை நேற்று நகரிற் கண்டேன் என்றுகூறி அம்புஜம்மாளைக்கொண்டு அவருக்கு டெலிபோன் கொடுத்து வரவழைத்து எல்லா சங்கதியையும் கூறினோம். பிறகு அவரிடம் நான் கண்டுபிடித்த உளவுகளைக் காட்டினேன். இரண்டொரு தினங்கள் கழித்துதான் அச்சுதம்பிள்ளை யெனக்கு விஷங் கொடுத்துக் கொல்லப்பார்த்தார். ஆனால் அது பலிக்கவில்லை.

இதற்கிடையில் அவர் எப்படியோ நான் ஆனந்தலிங்கிடம் சேர்ந்துகொண் டிருக்கிறேன் என்று கண்டார். அம்புஜம்மாள் ஆனந்தலிங்கை இக்கொலை செய்தவனைக் கண்டுபிடிக்க அமர்த்தியதும் அவருக்குத் தெரிந்துவிட்டிருக்கலாகும். அதன்மேல்தான் அவர் தம்மிடமிருக்கும் வேலைக்காரச் சிறுவனைக்கொண்டு என்னைப் பிடித்துத் தமது வீட்டில் அடைத்து வைக்கும்படி ஏற்பாடு செய்தார். ஆனால் அவர் செய்கை அவருக்கே கேடாய் முடிந்

தது. எவ்வாறெனில், அந்த இலக்ஷ்மணன் என்ற கோலை யும் அப்பொழுதானிருந்த பாதரட்சையையும் அதே வீட்டில், அதாவது அச்சுதம்பிள்ளையின் வீட்டிலிருக்கப் பார்த்தேன். நான் அங்கு அச்சுதம்பிள்ளை பள்ளூரில் பிடிக்கப்பட்டதாய் என்னிடம் காட்டிய புகைப்படத்தையும் அவ் வீட்டில் கண்டேன். நான் அங்கிருந்து தப்பித்துக் கொண்டு வெளிவந்ததும் ஆனந்தலிங்கிடம் யாவும் கூறினேன். மற்ற சங்கதிகள் அவரே கூறவேண்டும்" என்று முடித்தான்.

அதன்பிறகு ஆனந்தலிங் சாட்சிக்கூண்டில் நின்று பின்வருவாறு கூறினான் :—

"திருவேங்கடம் கூறியதுபோல் முதலில் அம்புஜம்மாள் எனக்குக் கடிதம் வரைந்ததும் பிறகு அந்தம்மாளே யனுப்பியதுபோல் கள்ளத்தனமான ஒரு டெலிபோன் சமாசாரம் என்னை வரவேண்டாமென்று வந்ததும் உண்மையே. பிறகு நான் அந்தம்மாளால் குற்றவாளியைக் கண்டுபிடிக்கும்படி அமர்த்தப்பட்டபின் திருவேங்கடம் கண்டுபிடித்த உளவுகளைப்பார்த்தேன். பிறகு ஒருநாள் துரைத்தனவக்கில், கிருஷ்ணராவ், அச்சுதம்பிள்ளை முதலியவர்கள் சுந்தரத்தை இரண்டாம்முறை சில கேள்விகள் கேட்டபோது அச்சுதம்பிள்ளைக்கும் சுந்தரத்திற்கும் ஏதோ மர்மமிருக்கிறதென்றும் சுந்தரம் எந்த காரணத்தாலோ அச்சுதம்பிள்ளையின் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறனென்றும் எனக்குப்புலப்பட்டது. அதன்பிறகு சுந்தரத்தை விசாரித்தபோது அது உண்மையேயென்று தெரிந்தது. அப்போது தெரிந்த சங்கதிகளாலும், திருவேங்கடம் கூறிய விஷயங்களாலும், இரத்னசாமிப்பிள்ளையின் மரணசாசனத்தைச் சோதித்துப்பார்த்தபோது அதில் கள்ளத்தனமாய்ச் சேர்க்கப்பட்டிருந்த வாக்கியங்களாலும் அச்சு

தம்பிள்ளைதான் இக்கொலையைச் செய்திருக்க வேண்டு மென்று புலப்பட்டது.

அதன்மேல் நான் ருசுவுகளைக் கண்டுபிடிக்கத் தொடங்கி முதலாவதாக அச்சுதம்பிள்ளை பள்ளூரிலிருந்து இரத்தினசாமிப்பிள்ளைக்குக் கொலை நடந்ததினம் அனுப் பியதாகக் கூறப்பட்ட தந்தி சமாசாரத்தைப்பற்றி விசா ரித்தேன். அச்சமாசாரம் பள்ளூரிலிருந்து கொலை நடந்த தினமாவது அதற்கு முன்பின்னாவது பள்ளூரிலிருக்கும் தந்தி காரியாலயத்திலிருந்து அனுப்பப்படவுமில்லை. இவ் வூர் தந்தி காரியாலயத்திலிருந்து வெளிப்பட்டு இரத்ன சாமிப்பிள்ளையிடம் கொடுக்கப்படவுமில்லையென்று தெரிந் தது. இதைச் சாட்சியைக்கொண்டு ருசுப்படுத்துகிறேன். பிறகு திருவேங்கடம் அச்சுதம்பிள்ளையின் வீட்டில் அடைக் கப்பட்டிருந்தபோது நான் அங்கு சென்று அச்சுதம்பிள் ளையின் வேலையாளை விசாரித்ததில் கொலை நடந்தவிடத்தி லகப்பட்ட பென்ஸில் அச்சுதம்பிள்ளையின் பென்ஸில் என்று தெரிந்தது. அப்பென்ஸில் சீவப்பட்ட கருவி அங்கிருந்தது. அச்சுதம்பிள்ளை தம்மிடமுள்ள பென்ஸில் களையெல்லாம் அக்கருவியினாலேயே சீவியிருந்தார். கொலை நடந்தவிடத்தில் தாம் தவறிவிட்டுவிட்ட பென்ஸில் போலீ ஸாரிடம் அகப்பட்டதை யறிந்ததே மறுநாள் அச்சுதம் பிள்ளை தம்மிடமிருந்த பென்ஸில்களையெல்லாம் கத்தியால் சீவிவிட்டு அக்கருவியைப் பெட்டியில் வைத்துவிட்டார். இதையும் சாக்ஷியைக் கொண்டுவந்து நிரூபிக்கிறேன்.

பிறகு திருவேங்கடம் அச்சுதம்பிள்ளை வீட்டிலிருந்து தப்பித்துக்கொண்டு வந்தபின் மண்குறிக்குப் பொருத்த மான இலக்ஷ்மணன் என்ற கோலையும், கொலை நடந்த விடத்திலிருந் தகப்பட்ட பொத்தானிருந்த பாதரக்ஷை யும் அவ்வீட்டில் தான் கண்டதாகக்கூறினான். அப்போதவ

னுக்கு அச்சுதம்பிள்ளையின் வீடென்று தெரியாது. இதற்கிடையில் அச்சுதம்பிள்ளை திருவேங்கடத்திற் களித்த காபி பாத்திரத்தைக் கொண்டுபோய்ச் சோதித்தபோது அதில் பாஷாணம் இருந்தது.

இப்போது சற்றும் ஐயமற அச்சுதம்பிள்ளையே கொலையாளி யென்று தெரிந்துவிட்டதோடு பூரணமான ருசுவும் அகப்பட்டது. அதன்மேல் அவர் வீட்டைச் சோதனை செய்ய இரகசியமாகப் பிரதம நியாயாதிபதியிடம் வாரன்ட் பெற்றுக்கொண்டேன். அச்சுதம்பிள்ளைக்கு இச்சங்கதி கொஞ்சம் தெரிந்தால், எப்படியாவது தப்பித்துக்கொண்டு போய்விடுவான். ஆகையால் கடைசி விசாரணை நடக்கும் தினம்வரையில் சற்றும் சங்கதியை வெளியிடாமலிருந்தேன். விசாரணை நடக்கும் தினம் போலீஸ்கமிஷனர், நகரக்குற்றவிசாரணை நியாயாதிபதி முதலியவர்களோடுசென்று அச்சுதம்பிள்ளையின் வீட்டைச் சோதனைசெய்தபோது கொலைசெய்த இலக்ஷ்மணன் என்ற ஈட்டிக்கோலையும், பொத்தான் இருந்த பாதரட்சையையும் கண்டுபிடித்தோம்.

இக்கொலை விஷயம் முதல் முதலாக ஒரு தென்னாட்டு மாதால் போலீஸ் பிரதம அதிகாரியின் காரியாலயத்திற்கு அறிவிக்கப்பட்டது. அவள் "இரத்னசாமிப் பிள்ளை கொல்லப்பட்டார். அவருடையசவம் கற்பகச்சோலையில் பந்தாடும் இடத்திற் கருகிலிருக்கிறது. அதைக் கொண்டு போய் அவர் வீட்டில் சேருங்கள்" என்று மட்டும் கூறினளேயன்றி தன்பெயரைக்கூட அவள் வெளியிடமறுத்து விட்டாள். டெலிபோன் மூலமாய் அச்சங்கதியைக் கேட்ட இன்ஸ்பெக்டர் கள்ளழகம்பிள்ளை அந்தச்சங்கதி அனுப்பப்பட்ட விடத்தில் சிறுவர்கள் இருமிக்கொண் டிருந்தார்களென்றும், அதன் சமீபத்தில் கட்டிடவேலை நடக்கிற

சத்தம் கேட்டதென்றும் கூறினர். அவ்வுளவைக்கொண்டு அம்மாதைத் திருவேங்கடத்தின் உதவியால் கண்டு பிடித்தேன். மற்றசங்கதி அவளே கூறுவாள். அவளை விசாரியுங்கள்" என்றான்.

---

## 27-வது அத்தியாயம்.

அதன்பிறகு டெலிபோன் மூலமாய் முதல் முதல் சங்கதியறிவித்த அத்தென்னாட்டுமாது சாட்சியாக விசாரிக்கப்பட்டாள். அவள் பின்வருமாறு கூறினாள்:—

"கொலை நடந்ததினம் மாலை நான் என் வீட்டிலிருந்தேன். அப்போது ஒருமனிதன் வீட்டிற்குள் வந்தான். அவன் நாணயமான உடை யணிந்துகொண்டு கையில் ஒரு கோலை வைத்துக்கொண் டிருந்தான். நான் இருக்கும் வீட்டில் முன்பு ஒருகடை யிருந்தது. அதனால் ஒரு டெலிபோன் அங்கிருந்தது. நான் அப்போதுதான் புதிதாக அங்கு வந்தபடியால் டெலிபோன் எடுக்கப்படாமலே யிருந்தது. அங்கு வந்த மனிதன் முதலில் என்னிடம் அன்பாகப்பேசினன். பிறகு அவன் அங்கிருக்கும் டெலிபோனில் தான் கூறுகிறபடி போலீஸ் தலைமையிடத்திற்குச் சங்கதியனுப்ப வேண்டுமென்றுகூறி என்னைப் பலவந்தம் செய்தான். நான் மறுத்தபோது தன் கையிலிருந்த கோலின் கைப்பிடியையிழுத்து அதிலிருந்துவந்த ஒரு கூர்மையான ஈட்டியை யெடுத்து, "நீ நான் கூறுகிறபடி செய்தால் உனக்குப் பத்துடாலர் அளிப்பேன். நீ மறுத்தால் கொன்றுவிடுவேன்" என்று பயமுறுத்தினன். அதன்மேல் நான் அவன் கூறியபடி டெலிபோனில் கூறிவிட்டேன். பிறகு அந்த ஆள் எனக்குச் சொன்னபடி பணமளித்துவிட்டுப் போய்விட்டான். அப்பணம் கொலை

யைமறைக்கக் கொடுக்கப்பட்ட கூலியேயென்று எனக்கு மனதிற்பட்டபடியால் நான் அதில் ஒருகாசுகூடத் தொட வில்லை. அன்று முதல் என்மனம் பெரிய வேதனையிலிருந் தது. பிறகு இதோவிருக்கும் ஆனந்தலிங் என்ற புண்ணிய வானும், அதோ விருக்கும் திருவேங்கடம் என்ற வாலிப னும் ஒருநாள் வந்து என்னை இதைப்பற்றி விசாரித்து, முடிவில் "நீ இப்போது எங்களிடம் கூறியதை யொருவ ரிடமும் சொல்லாதே. நீ நீதிச்சபைக்கு அழைக்கப்படு வாய். அங்கு வந்து நீதவான்முன் நடந்த சங்கதியை யுண்மைப்படி கூறிவிட்டால் உனக்கு ஒரு கெடுதியும் நேரி டாது என்று கூறினார்கள். அதுமுதல் தான் என்மனம் நிம்மதியடைந்தது" என்றாள்.

துரைத்தன வக்கீல்:—"அம்மனிதன் உன்னிடம் பேசிய போது அவன் உருவத்தைக்கண்டாயா? அவன் யாரென்றுகூற முடியுமா? காட்டமுடியுமா?" என்று கேட்டார்.

அம்மாது:—"நான் அவன் உருவம், உடை யணிந்திருந்த மாதிரி, யாவும் பார்த்தேன். அவன் குரலும் நன்றாய்த் தெரியும். ஏனெனில் குரலைமறைக்க அவனால் முடிய வில்லை. ஆனால் அவன் என்முன் இருந்தவரையில் தன் முகத்தை யொரு பத்திரிகையால் மறைத்துக்கொண் டிருந்தான். ஆயினும் அவனைக்கண்டா லறிந்துகொள் வேன். அதுமட்டுமல்ல. அவன் எனக்குக்காட்டி யென்னைப் பயப்படுத்திய ஈட்டியையும் கோலையும் பார்த்தால் உடனே தெரிந்துகொள்வேன். நான் அவற்றை நன்றாய் உற்றுநோக்கினேன்" என்றாள்.

அச்சுதம்பிள்ளையின் வீட்டிலிருந்தகப்பட்ட அக்கோலை யும் ஈட்டியையும் வேறு ஐந்தாறு கழிகளோடும் ஈட்டிக ளோடும் கலந்துவைத்து, "இவற்றில் நீ அம்மனிதனிடம்

கண்ட கோலும் ஈட்டியுமிருக்கின்றனவா பார்த்துக்கூறு" என்று கேட்டபோது அம்மாது அவை யிரண்டையும் எடுத்து இதே கோல் அம்மனிதன் கையிலிருந்தது. இதோ இந்த ஈட்டியைக் காட்டியே "நீ கூச்சலிட்டாலும், நான் கூறுகிறபடி நடக்க மறுத்தாலும் உன்னை யுடனே இந்த ஈட்டியால் குத்திக்கொல்வேன்" என்று என்னைப் பயமுறுத்தினன்" என்றாள்.

நியாயாதிபதி "அம்மனிதன் இப்போது இச்சபை யிலிருக்கிறானா பார்த்துக் கூறு" என்றார்.

அம்மாது "துரைகளே! அம்மனிதனை முன்னமே நான் இங்கு வந்ததே தெரிந்துகொண்டேன். இதோ குற்ற வாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டிருக்கிறானே இந்த அச்சு தம்பிள்ளைதான் அன்று என் வீட்டிற்கு வந்து என்னைப் பயமுறுத்தி அவ்வாறு டெலிபோனில் பேசச்செய்தவன்" என்றாள்.

நியாயாதிபதி "நீ யிவன் முகத்தைப் பார்க்கவில்லை யென்றாயே, அப்படியிருக்க இவன்றான் என்று கூறுகிறாயே" என்று கேட்டார். அம்மாது "பிரபுவே இவன் உயரம், உடையணிந்திருக்கும் மாதிரி, யாவற்றிலும் முக்கியமாய்க் குரல் இவற்றால் இவனே யென்று சத்தியமாய்க் கூறு வேன்" என்றாள்.

நியாயாதிபதி அச்சுதம் பிள்ளையை நோக்கி இச்சாட் சியை யேதேனும் குறுக்குக் கேள்வி கேட்கிறாயா என்ற தற்கு அவன் இல்லையென்றான்.

அதன் பிறகு பள்ளூர் தந்தியிலாகா காரியாலயத்தில் இருக்கும் இலிகிதன் சாட்சியாக விசாரிக்கப் பட்டான். அவன் "கொலை நடந்த தினமாவது அதற்கு முன்பாவது அச்சுதம்பிள்ளையேனும் வேறு எவரேனும் இரத்னசாமிப் பிள்ளையைப்பற்றி நான் இருக்கும் காரியாலயத்தின் மூல

மாய் எவ்வித சமாசாரமும் அனுப்பவில்லை" யென்று கூறினன்.

பிறகு இந்திரபுரித் தந்தியிலாகா காரியாலயத்திலிருக்கும் இலிகிதன் விசாரிக்கப்பட்டான். அவன் கொலை நடந்த தினமேனும் முன்தினமேனும் இரத்னசாமிப் பிள்ளைக்கு யாரிடமிருந்துந் தந்தி சமாசாரம் வரவில்லை யென்று சாட்சி பகர்ந்தான்.

அதன் பிறகு இந்திரபுரியிலுள்ள ஒரு கடைக்காரன் சாட்சியாக விசாரிக்கப் பட்டான். அவன் கீழ்க்கண்டவாறு பகர்ந்தான்:—

"நான் பத்திரிகைகள் விற்பவன். சமீபத்திலுள்ள வெளியூர்களிலிருந்து அன்றூடப் பத்திரிகை இரவு, தப்பினல் காலை இரயில் மூலமாய் என் கடைக்கு வந்துவிடும். குறித்த கொலை நடந்ததினம் காலை சுமார் பதினொரு மணிக்கு அச்சுதம்பிள்ளை யொருவண்டியில் என் கடைக்கு வந்து, தாம் வண்டியிலேயே யிருந்துகொண்டு சாரதியை யனுப்பிப் பள்ளூரில் அன்று வெளியான தினசரிப் பத்திரிகையை வாங்கினர். சாரதி வண்டியின் சாளாத்திலுள்ள திரையை நீக்கிப் பத்திரிகையை யவரிடமளித்தபோது நான் அவர் முகத்தைத் தற்செயலாகக் கண்டேன்" என்று கூறினன்.

நியாயாதிபதி துரைத்தன வக்கீலை நோக்கி "இன்னும் விசாரிக்கவேண்டிய சாக்ஷிகளிருக்கிறார்களோ?" என்றார்.

துரைத்தன வக்கீல் "பிரபுவே! இது காறும் கூறியவர்கள் வெளிச் சாட்சிகள். இவர்களாலேயே அச்சுதம்பிள்ளையே கொலை செய்தான் என்ற உண்மை பூரணமாய் நிரூபிக்கப்பட்டு விட்டது. ஆயினும் குற்றவாளியே குற்றத்தை யொப்புக்கொண்டான் என்பதற்குச் சாட்சிகளிருக்கின்றன. இரண்டு மூன்று பேர் இருக்கிறார்கள்.

அவர்களில் தங்களுக்குத் திருப்தியானவர்களை விசாரிக்கலாகும்'' என்றார்.

நியாயாதிபதி அவர்கள் யாரென்று கேட்டபோது துரைத்தன வக்கீல் "அச்சுதம்பிள்ளை யன்று நீதிச்சபையிலிருந்து சிறை செய்யப்பட்டபோது அவனைப் பிடித்துக் கொண்டு சென்ற போலீஸ்காரர்கள் இருவர்'' என்றார்.

அப்போலீஸ்காரரால் அச்சுதம்பிள்ளை சிறைச்சாலைக்குக் கொண்டு போகப்பட்டபோது நீதிச்சபையிலிருந்து வெளிச்செல்லும் அம்புஜத்தைப் பார்த்து "நான் ஏன் இதைச் செய்தேன் என்பது உனக்குத் தெரிகிறதா? உனக்காகவே செய்தேன். இப்போது நான் அதற்காக விசனப்படவில்லை. என் எண்ணம் நிறைவேறுமற்போனதற்காகவே விசனிக்கிறேன்'' என்று கூறிய சங்கதி ருசுவாயிற்று.

குற்றவாளி தான் தப்பித்துக்கொள்ள முயல்வதில் ஒரு பயனுமில்லை யென்று கருதி வாதிக்கவில்லை. ஒரு சாக்ஷியையும் குறுக்குக் கேள்வி கேட்கவுமில்லை. துரைத்தன வக்கீலுக்கு முன்னமே அச்சுதம்பிள்ளை விஷயத்தில் அந்தரங்கத்தில் வெறுப்பே. அவர் எழுந்து அச்சுதம்பிள்ளையே இரத்னசாமிப் பிள்ளையைக் கொன்றவன் என்பதைப் பற்றிய ருசுவுகளை யெல்லாம் கூறிக் கடைசியில் குற்றவாளி ஒன்று மறியாத மூடனல்ல; சட்டங்கள் தெரிந்தவன், புத்தி சாமார்த்திய முடையவன். இவன் கொலை செய்ததோடு மிக்க தந்திரமாக அக்குற்றத்தை நிரபராதிகள்மேல் சுமத்த முயன்றான். சாதாரணமாகவே இத்தகைய குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது மிக்க கஷ்டம். இக்குற்றவாளி மிக்க தந்திர சாமார்த்தியத்தோடும் முன் யோசனையோடும் கொலை நடந்ததினம் தான் வெளியூரிலிருந்ததாக யாவரையும் நம்பும்படி செய்ய அத்தாட்சிகளையுற்பத்திசெய்து கொண்டான். இது மட்டுமல்ல, தான்,

கொல்லப்பட்டவரின் சுற்றத்தாருக்குத் துணையாக இருந்து கொண்டு, மெய்யான குற்றவாளியைக் கண்டுபிடிக்கும் வழியில் ஒருவரையும் செல்லவிடாது தந்திரமாகத் தடுத்துக் கொண்டிருந்தான். திருவேங்கடம் என்ற சிறுவனிடம் சரியான உளவுகள் சிக்கியபோது அவன் சாமார்த்தியத்தோடு முதலில் அவற்றின் உண்மையை வெளியிடவில்லை. பிறகு சில காரணங்களால் அவனுக்கு அச்சுதம்பிள்ளை விஷயத்தில் சந்தேகம் உண்டாகியதால் அவன் இதைக் கண்டுபிடிக்க ஆனந்தலிங்கையே யமர்த்தும்படி செய்யவேண்டுமென்று கருதி அவ்வாறே தந்திரமாய்ச்செய்து முடித்தான். அப்போதும் அந்த ஏற்பாட்டைத் தடுக்கவே குற்றவாளி முயன்றான்.

இக்குற்றவாளி கண்டுபிடிக்கப் பட்டதற்கு சிறுவனாகிய திருவேங்கடமே மூலகாரணம். அவன் இல்லாதிருந்தால் குற்றவாளி ஆனந்தலிங் இதில் சம்பந்தப்படுவதைத் தடுத்து விட்டேயிருப்பான். ஆனந்தலிங் இதில் பிரவேசித்ததும் திருவேங்கடம் கண்டுபிடித்திருந்த உளவுகளின் விசேஷத்தை யுணர்ந்து தான் சாமார்த்தியத்தால் மற்ற பூரணமான ருசுக்களை யெல்லாம் கண்டுபிடித்தான். இன்றேல் நிரபராதியாகிய இலக்ஷ்மணப்பிள்ளை தூக்கிடப் பட்டிருப்பான். இக்குற்றவாளி தன் தொழில் முறையிலும் பெருந்துரோகமே செய்திருக்கிறான். குற்றத்தைத் தானே செய்து விட்டு ஒரு நிரபராதிமேல் அப்பழியைப் போட்டு, அவனுக்குத் தானே வக்கீலாகவும் அமர்ந்து தந்திரமாய் அவன் மரண தண்டனையடையும்படி செய்து விட்டான்.

நியாயாதிபதிகளே! இனி நான் முடிவாய்க் கூறவேண்டியது ஒன்றேயுளது. அதாவது "இத்தகைய பரமதுஷ்டன்

இனியும் ஜனசமுகத்தில் இருப்பது எப்போதும் ஆபத்தே யாதலால் இவன் விஷயத்தில் எள்ளளவு கருணை காட்டுவதும் தகுதியல்லவென்பதே'' என்று கூறிமுடித்தார்.

அதன் பிறகு நியாயாதிபதி மேற்கண்ட விஷயங்களையெல்லாம் ஜூரர்களுக்கு எடுத்துக்கூறி முடிவில் "அச்சுதம்பிள்ளை இக்கொலையைச் செய்ததற்குத் தக்க காரணமும் நிரூபிக்கப்பட்டதோடு எள்ளளவு சந்தேகமுமின்றி குற்றவாளியே கொலை செய்தான் என்பதற்கு வேண்டிய பூரணமான ருசுவுகளும் காட்டப்பட்டன. இவை மட்டுமல்ல. குற்றவாளியே தன் குற்றத்தை யொப்புக்கொண்டு இப்போதும் தான் அதற்கு விசனப்படவில்லை யென்று கூறினான் என்பதும் ருசுவாயிற்று. இனி நீங்கள் சுலபமாய் உங்கள் அபிப்பிராயத்தை வெளியிடலாம் என்றார்.

ஜூரர்கள் இரண்டொரு நிமிடங்களில் யாவரும் ஒரேமனதாய் குற்றவாளியே என்று கூறி விட்டார்கள். நியாயாதிபதி யதன்மேல் முறைமைப்படி குற்றவாளிக்கு மரண தண்டனை விதித்தார். அன்று மூன்றாம் நாள் அச்சுதம்பிள்ளை தூக்கிடப்பட்டான்.

*　*　*　*

இரண்டு வாரங்கள் கழித்து இலக்ஷ்மணம் பிள்ளைக்கும் அம்புஜத்திற்கும் ஆடம்பரமாய் விவாகம் நடந்தது. திருவேங்கடத்திற்கும் ஆனந்தவிலிங்கிற்கும் திருப்தியான பரிசுகள் அளிக்கப்பட்டன. இலக்ஷ்மணன் பிறகு தன் சுரங்க விவகாரத்தை வேறொருவர்க்கு இலாபத்தோடு விற்றுவிட்டு நகரத்திலேயே நின்றுவிட்டான். கொஞ்சகாலங் கழித்து எல்லம்மாள் இரண்டாவது மனைவியாக ஒரு வர்த்தகரை மணந்து கொண்டாள்.

அச்சுதம் பிள்ளையின் நடக்கை சாதாரணமான கல்வியால் ஒரு மனிதனுக்கு நற்புத்தியும் நன்னடக்கையும் உண்டாவதில்லை யென்றும் அத்தகைய கல்வி புத்தி கூர்மையைமட்டுமே யுண்டாக்குகிறதென்றும் நன்கு விளக்குகிறது. எப்போதும் ஆன்மார்த்த கல்வியே நன்மை பயக்கும்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

கற்பகச்சோலையின் அற்புதக்கொலை

முற்றிற்று.

—

"ஆனந்தபோதினி" பிரஸ், சென்னை.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
186513

# ஞானசெல்வாம்பாள்

அல்லது

# இரண்டு சகோதரிகள் 5-பாகம்.

நம்மிடம் இதுவரை வெளியாகியிருக்கும் அநேகம் நாவல்களில் இதுதான் மிகப் பெரியது. நூற்றுக்கு மேற்பட்ட பல அத்தியாயங்களையுடையது; "இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறு போல்" படிப்போர் மனத்தை இழுத்துக்கொள்ளத்தக்கது. கதை மிகப் பெரிதாயினும், வாசகர்களின் மனம் சிறிதும் அயர்ச்சியடையாமல் மேலும் மேலும் ஆனந்தமாக முடிவுவரை சென்றுகொண்டே யிருக்கும். படிப்பவர்கள் இப்புத்தகத்தைக் கைவிடாதபடி ஆகாரமுண்ணுங் காலத்திலுங்கூட விரித்தபடியே பார்த்துக்கொண்டு சாப்பிடும்படி அவ்வளவு இனிமை இந்நாவலில் அமைந்திருக்கின்றது.

கதாநாயகிகளாகிய ஞானம்பாள், செல்வாம்பாள் என்ற இரண்டு சகோதரிகளும், தங்களுக்கு மேலதிகாரிகளின்றித் தங்கள் இஷ்டம்போல் எங்கு முலவிச் சகல ஆடவர்களுடன் பழகிக்கொண்டிருந்ததால் அடைந்த பலவகைத் துன்பங்களும், வஞ்ச மாஞ்சர்களாகிய படுமோசக்காரர்களால் நிரபராதிகளாகிய பலர் பெரிய பெரிய விபத்துக்களுக்குள் சிக்கி மீள்வதும், பஞ்சமாபாதகர்கள் அஞ்சாமல் நல்லோர்க்கியற்றும் சஞ்சலச் செயல்களும், நெஞ்சு திடுக்கிடும் விஷயங்களும், முடிவில் தீயோர் பல ஆபத்துகளில் சிக்கி அடியோடொழிவதும், நல்லோர் சுகமடைவதும், இன்னும் எண்ணிறந்த பற்பல அற்புத விஷயங்களும் இதில் அடங்கியிருக்கின்றன.

நான்கு பாகம் வரை ஒவ்வொன்றுக்கு விலை ரூபா 2 0 0
ஐந்தாவது பாகம் மாத்திரம் விலை ரூபா 1 10 0
ஐந்து பாகங்களும் சேர்த்து வாங்குவோருக்கு விலை ரூபா 9 0 0

# இரத்தினபுரி இரகசியம் 2-பாகம்.

இதில் மிக்க ஆச்சரியமுள்ளனவும், நெஞ்சு திடுக்கிடக்கூடியவையும், ஆதி முதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடைய பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்படுகின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் உணரவேண்டிய இலௌகீக ஆசார விஷயங்களைப்பற்றிய நீதிகள் ஆங்காங்கு விளக்கிக் கூறப்பட்டிருக்கின்றன. 2-பாகமும் விலை ரூபா 4.

"ஆநந்தபோதினி" ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

புதிய நாவல்! பெருகும் ஆவல்!!

நாவல் வாசிக்கும் நண்பருக்கு நல் விருந்து

# மாதவி மாதவன்

அல்லது

## ஓர் துணிகரமான சாமர்த்திய ரெயில்வேக் களவு.

இன்பரசம் பொருந்தியது; படிக்கப் படிக்கப் பேரவா கொடுக்கக் கூடியது; தேன்போல் தித்திப்பது; பொருள் நிரம்பியது; இதுவரையில் வெளிவராதது; சாமர்த்திய சம்பவங்கள் பொதிந்தது; அழகிய கடிதத்தில் அச்சிடப்பட்டது, இரண்டு பாகமும் சேர்ந்து விலை ரூ. 1—12—0. தனித்தனி வாங்குபவருக்கு ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 1.

---

# அமராவதி 2-பாகம்.

ஆரணி குப்புசாமி முதலியா ரவர்க ளியற்றியது.

இது மிக்க பிரமையை யுண்டாக்கும் அற்புத சம்பவங்கள் நிறைந்த நாவல். ஒரு மனிதன் சுய நம்பிக்கையும், நேர்மையான நடக்கையும், ஊக்கமுமுடையவனாயிருந்தால் அவன் தான் கோரிய காரியத்தில் கட்டாயம் ஜெயம் பெறுவான் என்பதும், எத்தகைய ஆபத்துகளிலும் தப்பித்துக்கொண்டு கீர்த்தியும் மேலான பதவியும் அடைவானென்பதும் இதில் நன்றாய் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அசம்பாவிதமெனத் தோன்றும் அநேகம் சம்பவங்கள் இதில் உண்மையாகவே நடைபெறுவது வாசிப்போர்க்கு அளவற்ற மனமகிழ்ச்சியை யளிக்கும். 2-பாகமும் விலை ரூபா 4.

# இந்திராபாய்

இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளியாகிய முஷ்டிக்கரம் என்ற கள்ளன் கல்வி, சாத்திர ஆராய்ச்சி, தந்திரம், சாமார்த்தியம் முதலிய யாவும் உடையவனாதலின், அவன் தன்கூட இருக்கும் ஆட்களுக்குக்கூட, தன் சுய உருவத்தைக் காட்டாமலே கேட்போர் நெஞ்சம் கலங்கும்படியாகச் செய்யும் பல கொலை களவுகள் அதிசயமானவைகளே. இந்திராபாய் பன்முறைகளில் அவனிடம் சிக்கிக்கொண்டு சற்றும் எதிர்பாராத ஆச்சரியமான விதமாய்ப் பிராணாபத்துகளிலிருந்து தப்புவதும், அவளைக் காப்பாற்றவும், முஷ்டிக்கரத்தைக் கண்டு பிடிக்கவும் துப்பறியும் கிருஷ்ணாரவ் செய்யும் சாமார்த்தியங்களும் வாசிப்போர்க்குப் பிரமையையுண்டாக்கும்.

இதன் விலை ரூபா 2 8 0

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை, மதராஸ்.

# ஆனந்தபோதினி

## (இனிய தமிழில் வெளிவரும் மாத சஞ்சிகை.)

இது, 20000-இருபதாயிரம் சந்தாதாரர்களை யுடையது; பன்னிரண்டு வருடங்கட்குமுன் தொடங்கி நடைபெற்று வருவது; டிம்மி 8-பக்க அளவில் 48-பக்கங்களுள்ளது. நாடோறும் மேலும் மேலும் புதிய சந்தாதாரர்கள் பலர் சேர்ந்து விருப்பத்துடன் ஆதரித்து வருவது. மனிதர் முக்கியமாக அடையத்தக்கனவாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்தங்கள் நான்கையும் பெறுதற்குரிய மார்க்கங்களைத் தெளிவாக விளக்கிக்காட்டக்கூடியது; செந்தமிழை விருத்திசெய்யத்தக்கது; பெண்மக்கள், ஆடவர், மாணவர், மாணவிகள், பாலர், விருத்தர்முதலிய எல்லோருக்கும் அறிவை விளக்கி ஆனந்தத்தைத் தரவல்லது; வகுப்புபேதமின்றிப் பொதுவில் நின்று சகலர்க்கும் நீதி கூறுவது. எல்லாநாடுகளிலும் தமிழறிந்த சகலரிடத்தும் பரவிவருவது; கல்வியின் மிக்காராகிய பலரால் எழுதப்பெறும் பற்பல வியாசங்கள் நிரம்பப்பெற்று வருவது; தேசநலம், தருமமார்க்கம், கைத்தொழில், விவசாயம், வாணிபம், வைத்தியம், சோதிடம், தாய்மொழி முதலியவற்றின்சார்பாக அநேக வியாசங்களும், தேசபக்தர் முதலிய பெரியார் சரித்திரங்களும், வர்த்தமானங்களும், நாவல்களும், பஞ்சாங்கமும் இதில் மாதந்தோறும் வெளிவரும்; ஆனந்தமூட்டும் விநோதவிஷயங்களும் நிறைந்துள்ளன. தமிழ் நாட்டில் அதிகரித்த சந்தாதாரர்களையுடையதும், நெடுங்காலமாக நிலைபெற்று நடந்துவருவதும், குறைந்த சந்தாத்தொகையுள்ளதுமான மாதசஞ்சிகை இஃதொன்றே. தமிழ்மக்கள் ஒவ்வொருவருக்கும் இது மிக அவசியமானது. ஆதலின், நண்பர்களே! இதற்கு உடனே சந்தாதாரராகச் சேருங்கள். முன்பண மனுப்பியாவது வி. பி-யிலாவது இப்பத்திரிகை பெற்றுக்கொள்ளலாம். இதன் வருட ஆரம்பம் ஒவ்வொருவருடத்திலும் ஆடிமீ ஆதலால் எந்தமாதத்தில் ஒருவர் சந்தாதாரராகச் சேர்ந்தாலும் அவர்க்கு ஆடிமீ முதலே ஒரு வருடப் பத்திரிகை அனுப்பப்படும். மாதிரிக்காப்பி இனாமாக அனுப்பப்படும்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாடுகளுக்கு
1-வருஷ சந்தா ரூபா 1—0—0

பினங், சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0
வி. பி. யில்லாத நாடுகளிலுள்ளவர்கள் முன்பண மனுப்பவேண்டும்.

**விலாசம்: மானேஜர், "ஆனந்தபோதினி" ஆபீஸ்,**
நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதராஸ்.

Printed at the "Ananda Bodhini" Press, Madras